Guaranteed Circulation 1,000 Copies.

Registered No. M. 1124.

Vol. I] [No. 4, 5

OFFICE OF THE REGISTRAR
10 OCT 1914
MADRAS.

இந்தியன் லா ஜர்னல்

(மாதம் நான்குமுறையாக பிரதி சனிக்கிழமையும் பிரசுரிக்கப்படுகிறது.)

1914ஆு செப்டம்பர்மீ 5, 12உ சனிக்கிழமைகள்.

சென்னை ஹைகோர்ட் தீர்ப்புகள்.

PRINTED AND PUBLISHED BY S. SUBRAMANYA AIYAR,
AT THE INDIA PRINTING WORKS, 117, ARMENIAN STREET, MADRAS.—1914.

"Chandra Raka"

A very interesting Tamil Novel

BY

Mr. S. M. Appasawmi Naidu

சந்திர ரேகா

(அற்புதமான தமிழ் நாவல்.)

நீதிநூலுக்கு நூலாகவும் இன்பமான கதைக்குக்

கதையாகவுமிருக்கும்படியாக

ம-ள-ள-ஸ்ரீ எஸ். எம். அப்பாசாமி நாயுடு

அவர்களால் இயற்றப்பட்டது.

வாசிக்க வாசிக்க இன்பமாயிருக்கும்.

கம்பராமாயணம், கைவல்லியம், திருக்குறள், பாரதம், பாகவதம், பகவத்கீதை முதலியவைகளிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

தும்ப மலர்போல வெளுப்பான கடுதாசியில் முத்துப்போன்ற எழுத்துகளால் அச்சிடப்பட்டு நேர்த்தியாகப் பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது.

விலை—தபால் சார்ஜ் உள்பட ரூ. 1

மானேஜர்,

இந்தியன் லா ஜர்னல் ஆபீஸ்,

117, அரமனைக்காரத் தெருவு, சென்னை.

வருஷசந்தா தபால் சார்ஜ் உள்பட ரூ. 5-4-0.	சகல வ்யாபாரங்களுக்கும் மானேஜர், இந்தியன் லா ஜர்னல் ஆபீஸ்.	தனி காப்பி, அணா 4.

THE INDIAN LAW JOURNAL.

(TAMIL EDITION.)

இந்தியன் லா ஜர்னல்.

(தமிழ் பிரசுரம்.)

(மாதம் நான்குமுறை ஒவ்வொரு சனிக்கிழமையும் பிரசுரிக்கப்படுகிறது.)

OF THE REGISTR... OF BOOKS
10 OCT 1914
MADRAS

வருஷசந்தா.

	ரூ.அ.பை.
இந்தியா, பர்மா, ரெங்கூனுக்கு தபால் சார்ஜ் உள்பட ...	... 5—4—0
சிங்கப்பூர் பினங்கு ...	... 8—0—0
ஒரு வார சஞ்சிகை ...	... 0—2—0

பத்திரிகை வேண்டியவர்கள் சந்தாத் தொகையை அனுப்பி கடிதம் எழுதவேண்டும். இல்லாவிடில் வி. பி. தபாலில் அனுப்பும்படி உத்திரவு செய்யவேண்டும்.

மாதிரி சஞ்சிகை வேண்டியவர்கள் ½ அணா தபால் ஸ்டாம்பு அடக்கம் செய்து அனுப்பவேண்டும்.

விளம்பர விகிதம்.

	ரூ. அ. பை.
48 சஞ்சிகைகளிலும் ஒரு வருடத்திற்கு ஒரு பக்கத்திற்கு ...	... 120—0—0
6 மாதங்களுக்கு ...	60—0—0
3 ,, ...	35—0—0

இந்த பிரகாரம் பாதி பக்கத்திற்கும், கால் பக்கத்திற்கும் கணக்கு செய்துகொள்ளவேண்டும். சாஸ்வத ஒப்பந்தம் செய்கிறவர்கள் மானேஜருடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும்.

விளம்பரம்.

இந்தியன் லா ஜர்னலுக்கு சந்தாதார்கள் சேர்க்க கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

மானேஜர்,

இந்தியன் லா ஜர்னல் ஆபீஸ்,

117, அரமனைக்காரத் தெருவு, சென்னை.

ABBREVIATIONS

குறிப்புகள்.

I. L. R.=Indian Law Reports.

இ. லா. ரி.=இந்தியன் லா ரிப்போர்ட்டுகள்.

5 Mad. 145=5 Madras 145.

5. சென். 145=5-வது வால்யூம், சென்னப்பட்டணம், 145-வது பக்கம்.

Cal=Calcutta.

கல்=கல்கத்தா.

Bom=Bombay.

பம்=பம்பாய்.

All=Allahabad.

அல=அலகபாத்.

I. C=Indian Cases.

இ. கே=இந்தியன் கேஸ்கள்.

I. L. J=Indian Law Journal.

இ. லா. ஜ=இந்தியன் லா ஜர்னல்.

M. L. J=Madras Law Journal.

ம. லா. ஜ=மதிராஸ் லா ஜர்னல்.

M. W. N=Madras Weekly Notes.

ம. வீ. நோட்=மதிராஸ் வீக்லி நோட்டீஸ்.

(இன்னும் சேர்க்கப்படும்.)

இந்தியன் லா ஜர்னல்

மாதம் நான்குமுறை: ஒவ்வொரு சனிக்கிழமையும் பிரசுரிக்கப்படுகிறது.

Vol. I. தொ. 1. | 5TH & 12TH SEPTEMBER 1914. | No. 4, 5. நெ. 4, 5.

இந்தியன் லா ஜர்னல்.

1914வரு செப்டம்பர்மீ
5, 12உ சனிக்கிழமைகள்.

THE WAR AND HOW MAY IT END?

இப்போது நடக்கும் சண்டை எவ்விதமாய் முடியும்?

நாம் இதற்குமுன் நெம்பரில் இப்போது நமக்கு விரோதிகளாய் நம்முடன் யுத்தம் செய்து கொண்டிருக்கும் ஜர்மனி, ஆஸ்ட்ரியா தேசத்தவர்களுக்கு, அவர்களுக்கு அவசியமாகவுள்ள வஸ்துக்களை இந்த யுத்தத்தில் சம்மந்தப்படாத தேசங்கள் மூலமாய் வரவழைத்துக் கொள்வது சாத்யமில்லையென்று சொல்லி இருக்கிறோம். அது ஏன் அப்படி என்பது யுத்தத்தில் சம்மந்தப்பட்டவர்களும், சம்மந்தப்படாதவர்களும் அனுஷ்டிக்க வேண்டியதான சில யுத்ததர்மங்கள் உண்டு.

அந்த தர்மங்கள் என்னவென்று கீழே விவரிப்போம் :—முதலாவது மொத்த தேசத்தார்களையும், இரண்டு பிரிவாக பிரித்துக்கொள்ள வேண்டும். யுத்தத்தில் சம்மந்தப்பட்டவர்கள் இவர்களுக்கு பெல்லிஜரண்ட்ஸ் என்றுபெயர். சம்மந்தப்படாமல் ஒதுக்கமாயிருந்து எவ்வித சகாயமும் செய்யாமல் நிற்பவர் நியூட்ரல்ஸ் என்று பெயர்.

பெல்லிஜரண்ட்ஸ் ஒவ்வொருவரும் தங்கள் எதிரிகளுடைய வியாபாரக்கப்பல் முதலியவைகள் சண்டை நடந்துவரும் தேசங்களிலாவது, எல்லோருக்கும் பொதுவான நடுசமுத்திரம் போன்ற பிரதேசங்களிலாவது இருக்கக்கண்டால் அவைகளைப்பிடித்து ஸ்வாதீனம் செய்துகொள்ளலாம். அல்லாவிடில் அழித்துவிடலாம். சமுத்திரத்தின் கரையிலிருந்து சில மைல்தூரம் அந்தந்ததேசத்தைச் சேர்ந்ததாக பாவம். அப்பேர்பட்டகரை நெருக்கமாய் பெல்லிஜரண்ட்ஸ் யுத்தகப்பல்கள் நியூட்ரல் ப்ரதேசத்து ஓரமாய் எந்த காரணத்தினாலாவது ஒதுங்கினால் அவைகளுக்கு மருதுறைமுகம் போய்ச்சேருமளவில் வேண்டிய கரி முதலிய சாமான்களை பெற்றுக்கொள்ளலாமே தவிர அதற்குமேற்பட்டு ஒன்றும் கொடுக்கக்கூடாது மேலும் அவைகள் 24-மணி நேரத்திற்குள்ளாக ஒதுங்கின துறைமுகத்தைவிட்டு வெளியேபோய்விடவேண்டும். அப்படிக்கு 24-மணி நேரத்திற்குள் புறப்படக் கூடாதபடி கப்பலில் ஏதாவது தோஷமிருந்து ரிபேர் செய்யவேண்டிய தவசியமாக இருந்தால் அப்பேர்ப்பட்ட ரிபேர்களைச்செய்ய அனுமதி கிடைக்காது. ஆனதுபற்றி அந்தத்துறை முகத்திலேயே யுத்தம் முடிவாகிறவரையில் இருக்க வேண்

டியது. இந்த விதியைமீறினல் அவைகள் சுதேசம் போகக்கூடா வண்ணம், எஞ்சின் முதலானதுகளை சுழற்றி பிரித்து விடுவார்கள். மேலும் அந்தக்கப்பல் காப்டன் முதல் எல்லா சிப்பந்திகளும் இந்த யுத்தம் முடிகிறவரை தாங்கள் சண்டையில் கலக்கிறதில்லையென்று ப்ரமாணம் செய்தபிறகுதான் விடப்படுவார்கள்.

இது இப்படி இருக்க, ஜர்மனி, ஆஸ்ட்ரியா தேசங்களுக்கு இப்போது அவைகளைச்சுற்றியுள்ள எல்லா தேசத்தோர்களும் விரோதிகளாக சண்டைசெய்து வருகிருர்கள். ஆகையால் நிலம் மார்க்கமாய் அவர்களுக்கு யாதொரு சாமானும் வர வழிஇல்லை. சமுத்திர திரங்களிலோ அவர்களுக்கு வெளிப்பக்கத்தில் ராஜ்யங்களாவது, தனித்தனியே துறை முகங்களாவது அவர்களுக்கு ஸ்வாதீனப்பட்டதாக ஒன்றும் கிடையாது. ஜர்மனிக்கு வடபாகத்தில் துறைமுகங்கள் உண்டு. அத்துறைமுகங்களினின்றும் வெளிக்கிளம்பவேணுமானல் ஒவ்வொரு அடிக்கும் அவர்களைத்தடுத்து எதிர்த்து நாசம் செய்ய ஆலெண்ட், பெல்ஜியம், இங்கிலாந்து, பிரான்சு இவ்வளவு பேர்களும் காத்திருக்கிருர்கள். வழியிலோ அவர்களுக்கு சற்று ஒதுங்க இடமாவது, வேண்டிய சாமான்களைச்சேர்த்துக்கொள்ள துறைமுகங்களாவது கிடையாது. ஆகையால் புறப்படுமுதல் யுத்தம் தீர்ந்து திரும்பிவரக்கூடியவரையில் எவ்வளவு மாதங்களானுலும் அவ்வளவு காலத்துக்கும் வேண்டிய எல்லாவித வஸ்துக்களும் குடிக்கிற தண்ணீர் உட்பட ஒரே தரமாய்ச் சேர்த்து வைத்துக்கொள்ளவேண்டும். கொஞ்ச நஞ்சம் குறைவுபட்டால் பூர்த்திசெய்துக்கொள்ள வகை கிடையாது. இந்தக் காரணங்களை எல்லாம் செவ்வையாய் தெரிந்துகொண்டவர்கள் முடிவில் ஜர்மனியர் ஜெயமடைவார்களென்றுகொஞ்சங் கூட எண்ணமாட்டார்கள்.

MADRAS HIGH COURT.

மதருஸ் ஐகோர்ட்

S. A. No. 71 of 1913.

வாதி அநேக பிரதிவாதிகள்பேரில் நிலம் தனக்கு சுவாதீனமாக டிக்கிரி பெற்றிருக்க அவர்களில் சில பிரதிவாதிகளோடு மாத்திரம் தான் நிலம் சுவாதீனம் செய்துகொள்வதற்காக ஏற்பாடு செய்துகொண்டு மற்ற பிரதிவாதிகளுடன் ஓர்வித ஏற்பாடும்செய்துகொள்ளாமலிருந்துவிட்டு டிக்ரியை நிறைவேற்ற வாயிதா கடந்த பிறகு தான் சிலருடன் செய்துகொண்ட ஏற்பாட்டை முன்னிட்டு மற்றவர்களுடய பாகத்தையும் சுவாதீனம் செய்ய தாவாசெய்தால் காலாவதி தோஷத்தால் செல்லாதென்றும் உடன்படிக்கை செய்துக் கொள்ளாதவர்களுடய பாகங்களை இழந்துவிடவேண்டுமென்றும் தீர்ப்பு.

S. A. No. 632 of 1913.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் சதாசிவய்யர்,
மிஸ்டர் நேபியர்.

ஒரு சுவாதீன அடமானதாரன் தன்னடமானத்திற்குட்படாத அதேபட்டாவிலடங்கிய வேறு நிலங்களின் தீர்வையைக் கட்டி தனக்குச் சேரவேண்டிய அடமானத் துகையுடன் சேர்த்துக்கொள்ளலாமா—நீர்வரி (Irrigation cess) கட்டுதல்--நிலங்களை விற்பனைக்குகொண்டுவராமலிருக்க அவசியமா.

தீர்ப்பு :—ஒரு பட்டாதாருடைய எல்லாநிலங்களும் அவன்கட்ட வேண்டிய மொத்ததீர்வைக்கும் தனித்தனியே பொறுத்தவையாகையால் சுவாதீன அடமானதாரன் தனக்கு அடமானமாயுள்ள நிலங்கள் ஏலத்துக்குவர வொட்டாமல் காப்பாற்றிக் கொள்ள அந்த பட்டாவைப் பொறுத்த தீர்வையை கட்டுகிறது நியாயம்தான். நீர் வரியும் கூட 1864-வது மதருஸ் ஆக்ட் II-படி பப்ளிக் ரெவின்யூவென்று

செப்பப்பட்டிருக்கிற படியாலும் அந்த ஆக்ட் 42-வது, ஸெக்ஷன்படி நீர்வரிக்காக நிலம் ஏலம் போடப்பட்டால் அந்த ஏலத்தை அதற்கு முன்னிட்ட அடமானங்கள் பாதிக்க மாட்டா தென்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆகை யால் அப்பேர்பட்ட ஏலத்தை தடுப்பதற்காக ஸ்வாதீனஅடமானதார் பணம் செலுத்தினல் அந்த தொகையையும் அந்த அடமானதொகை யோடு சேர்த்துக் கொள்ளலாம். மேலும் பத்திர ஷரத்துப்படி நிலவரும்படியிலிருந்து அடமான துகை பூராவும் செல்லாகிறவரை யில் அடமானதாரருக்கு நிலத்தை அனுபவி க்க பாத்தியதை இருந்தால் இந்த தீர்வைகள் கட்டிய தொகைகள் கூட செல்லாகிற வரை யில் அந்த நிலத்தை அனுபவித்துக் கொள்ள லாம். செல்லாக வேண்டிய தொகைகளை பெற்றுக்கொண்டு நிலஸ்வாதீனத்தை விட்டு விடும்படி நிற்பந்திக்க கூடாது.

S. A. No. 1874 of 1913.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் எய்லிங்,
மிஸ்டர் நேபியர்.

மதறாஸ் எஸ்டேட் லாண்ட் ஆக்ட் (I of 1908), ஸெக்ஷன் 63—தீர்வை தீர்மானிக்க ஸூட்—கீழ்க்குடித்தனக்காரர்கள் கிரமத்தை ஜாஸ்திரேட்டுபடி தீர்வை செலுத்தி வந்ததால் உண்டாகும் பாத்தியதை—பூராத் துகையும் சேர்ந்து விட்டதென்கிற அனுமானம். நிலத் துக்குடையவர் ரயத்துக்கு, தாவாபஸலிக்கு என்று ஒரு ரசீது கொடுத்திருந்தால் அதில் பாக்கிக்காக கொஞ்சம் வரவு என்று காணுதி ருந்தால் அந்தரசீது இந்த 1908-வது வருஷம், 1வது ஆக்ட், 63-வது ஸெக்ஷன்படி அந்த பஸ லிக்கு சேரவேண்டிய பூராதீர்வைக்கும் லா, தாவா ரசீதென்று தீர்மானிக்கப்பட்டது. சில வருஷங்களில் கீழ்க்குடித்தனக்காரர்கள் (Sub-tenant) அதிக ரேட்டுப்படி பணம் செலுத்தி னதினலேயே ஜாஸ்தியான தொகைக்கு பாத் தியதையை கொடுக்காது.

S. A. No. 79 of 1913.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் சதாசிவய்யரும்,
மிஸ்டர் டயாப்ஜியும்.

எஸ்டேட் லாண்ட் ஆக்ட் ஸெக்ஷன்கள் 143,144 எக்ஸாக்ட் என்னும் பதத்தினுடைய அர்த்தம்—அக்கிரமமானவரிகள் வெகுகாலமாய் கொடுக்கப்பட்டு வந்திருந்த போதிலும் அவை கள் சட்டப்படி வசூல் செய்யத் தக்கவை களல்ல.

எக்ஸாக்ட் என்கிற பதம் பயமுறுத்தி நிற் பந்தப்படுத்தி வசூல் செய்வது என்பதாம். சட்டப்படி வசூல் செய்யத்தகாதவரிகள் டிமா ண்டுகூட இல்லாமல் இதுவரையில் செலுத் தப்பட்டுவந்தன என்பதை பாத்யதையாகக் கொண்டு அவைகளுக்காக 144-வது ஸெக்ஷன் படிதாவாசெய்தால் செல்லாது. கிராமபிச்சை, மகிமை, கஜாணுதக்ரீர், தசராதா ஜர்பட்டி இவைகள், அவைகளின் பேர்களைக் கொண்டே அக்ரமமானவரிகள் என்றுஏற்படுகிறது. அவை கள் வெகுகாலமாய் கொடுபட்டு வருகின்றன வென்று குடித்தனக்காரரிடம் வசூல் செய்யத் தகாது.

A. S. No. 152 of 1911.

ஜட்ஜிகள் :—ஆக்டிங் சீப் ஜட்ஜியும்,
மிஸ்டர் ஆனுவும்.

ஹிந்து விதவை சொத்துபராதீனம் செய் தல்—பிறகு அடுத்த உத்திரவார்ஸுக்குஎல்லா பாத்தியதையையும் ஒப்புவித்தல் — முந்தின பராதீனம் விதவையின் காலம்வரை செல்லும்.

ஒரு ஹிந்துவிதவை தன்னுடைய சொத்தை பராதீனம் செய்துவிட்டு உடனே உத்திர வார்ஸுக்கு தன்னுடைய பாத்யதை எல்லாம் ஒப்பு வித்ததினலேயே அதற்கு முன்செய்தி ருந்த பராதீனம் பாதிக்கப்படாது. அவளு டையகாலம்வரை அது சிலாமணியாகத் தகுந் ததுதான்.

S. A. No. 121 of 1911.

ஜட்ஜிகள் :—ஆக்டிங் சீப் ஜட்ஜியும், மிஸ்டர் சேஷகிரி ஐயரும்.

அலம் ராகவலுசெட்டி மற்றொருவரும். } வாதிகள்.

v.

பெள்ளத்தி சீதம்மா மற்றொருவரும். } பிரதிவாதிகள்.

சிவில் ப்ரொஸீஜர் கோட் ஸெக்ஷன் 92-வது ஸேவார்த்திகளால் ஸ்கீம்ஸூட்—தர்ம ஸொத்துக்களை ஸ்வாதீனமடைந்திருப்பவர்கள் பார்டிகளாகச் சேர்த்ததுகிரமமா—நெல்லூர்டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் டிரஸ்டிமாத்திரம் தான் பிரதிவாதியாக சேர்க்கப்பட வேண்டுமே யல்லது தர்ம ஸொத்துக்களை ஸூவாதீனமடைந்து, 3,4 பிரதிவாதிகளை ஸ்கீம் ஸூட்டில் பார்டிகளாகச் சேர்த்தது சரியல்லவென்று அந்த 3,4 ப்ரதிவாதிகள் சம்மந்தப்பட்ட மட்டில் ஸூட்டை டிஸ்மிஸ் செய்துவிட்டார். அதிலிருந்தும் ஹைகோர்ட் அப்பில்.

ஆக்டிங் சீப் ஜட்ஜ் ஜட்ஜமெண்ட் :—இந்த தாவாவில் 1,2, பிரதிவாதிகளாகிய இந்த தர்மபரிபாலனத்திற்காக ஏற்பட்ட டிரஸ்டிகள் 3,4, பிரதிவாதிகளுக்குக் கொடுத்து இருக்கும் நம்பிக்கை துரோகம் (Breach of Trust) என்றும் அந்த 3,4, பிரதிவாதிகள் சம்மந்தப்பட்டமட்டில் இந்த சூட்டை டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் தள்ளிவிட்டது பிசகென்றும் இந்த அப்பீல். 92-வது ஸெக்ஷன் கீழ் கொண்டு வரப்பட்ட வியாஜ்யத்தில் 3,4, பிரதிவாதிகளைப் போன்றவர்கள் பேரில் பொஸெஷனுக்காக டிக்ரி கொடுக்கத்தகாதென்பது சந்தேகமற தீர்ந்திருக்கிற விஷயம். அப்பீல் வாதிகள் அவர்கள் பெற்றிருக்கும் இஜாரா செல்லத் தகாதென்கிற டிக்லெரேஷன் செய்யக் கூடுமென்று வாதிக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட டிக்லரேஷன் செய்யக் கூடுமானால் பொஸெஷனும் கூட ஏன் கொடுக்க கூடாதென்று ஏற்படவில்லை. ஆகையால் 3,4, பிரதிவாதிகள் மேல் ஒரு ரிலீபும் அடையக் கூடாதிருக்க வாதிகள் அவர்களை பார்டி ஆக்கினது சரிதானா என்பதுதான் கேள்வி. கஸபர் உஜெயின் கான்வெர் ஸஸ்யாபர் ஹீஸெயின் (28 All. 112), பூனா கலெக்டர் *v.* பாய்சஞ்சல்பாய் (35 Bom. 417) இந்த 2 தீர்ப்புகளும் ஒரு விதமாய் இருக்கின்றன. புத்துலிங்க் *v.* நிரத்பரன்ராய் (2 C. L. J. 431), என்கிற கல்கத்தா கோர்ட்டு தீர்மானம் வேறொருவிதமாக இருக்கிறது. எனக்கு கல்கத்தா கேஸில் ஜட்ஜ் முகர்ஜீயின் தீர்மானம் தான் சரியானதென்று தோன்றுகிறது. அதன்படி இந்தப் பிரதிவாதிகளை பார்டிகளாகச் சேர்த்தது பிசகு. அந்த பிரதிவாதிகளே தானாகபார்டிகளாக வரவேண்டுமென்று கோரிக்கொண்டிருந்தால் அப்போது சேர்த்திருக்கலாம். அவருடைய இஷ்டத்திற்கு விரோதமாய் சேர்த்திருக்க கூடாது. ஏனெனில் இந்த 92-வது ஸெக்ஷன்கீழ் செய்யும் ஸூட்டில் ஆர்டர் 1, ரூல் 10 கண்டிருக்கிறபடி அவர்களுக்குள்ள பாத்யாபாத்யதைகளை எல்லாம் நிரவிசாரித்து தீர்மானிக்கத்தகாது. பாக வியாஜ்யங்களில் எவரெவர்களிடத்தில் சொத்துக்கள் ஸ்வாதீனமாக இருக்கிறதோ அவர்களை எல்லாம் பார்டிகளாக ஆக்குவது கிரமந்தான். அப்பேர்ப்பட்ட வியாஜ்யத்தில் எல்லோருடைய பாத்யாபாத்யதையும் தீர்மானிக்கப்படுகிறது. இந்த ஸ்கீம் ஸூட்டில் அப்படிக்கு யில்லை. ஆகையால் இந்த அப்பீலை நான் செலவுடன் தள்ளிவிடுகிறேன்.

ஜட்ஜ் சேஷகிரி ஐயர் ஜட்ஜ்மெண்ட் :—இரண்டு ஸேவார்த்திகள் ஸிவில் ப்ரொஸீஜர் கோட், ஸெக்ஷன் 92-வதின் கீழ்தாவா கோவிலினுடைய தர்மகர்த்தாக்களாகிய 1, 2, பிரதிவாதிகளை தள்ளிவிட வேண்டுமாயும், அந்த கோவில் மானேஜ்மெண்டுக்கு ஒரு ஸ்கீம் ஏற்படுத்தவேண்டுமாயும், இன்னும் வேறு சில

ரிஸீப்கள் பெறுவதற்காகவும், இந்த ஸூட்செய்திருக்கிறார்கள். இந்த ஸூட்டில் இந்த தர்ம கர்த்தாக்கள் பேரில் முக்கியமான தாவா என்னவென்றால் அவர்கள் அக்கிரமமாய் 3, 4, பிரதிவாதிகளுக்கு மிகவும் குறைந்த கட்டுக்குத்தகைக்கு வெகு நாளைக்கு இஜாராகொடுத்திருக்கிறார்கள் என்பதுதான்.

ஜில்லா ஜட்ஜ் 1, 2, பிரதிவாதிகள் அவர்கள் மானேஜ்மண்டில் ஆரம்ப தவறுதலான நம்பிக்கைத்ரோகமான நடவடிக்கைகள் நடந்திருப்பதாக ருஜுவானதாய் அபிப்ராயம் கொண்டு அவர்களை தர்மகர்த்தாவேலையி னின்றும் தள்ளிவிடும்படியாய் தீர்மானம்செய்து வேறு தர்ம கர்த்தாக்களை நியமிக்க வேண்டியதற்காக சில ஏற்பாடுகளும் உத்திரவு செய்து 3, 4, பிரதிவாதிகள் சம்மந்தப்பட்ட மட்டில் சூட்டை சிலவுடன் தள்ளியு மிருக்கிறார். வாதிகள் அப்பீல் செய்திருக்கிறார்கள். வாதிகள் 3, 4, பிரதிவாதிகள் அடைந்திருக்கிற இஜாரா அந்த தேவஸ்தானத்தை பந்தப்படுத்தா தென்று ஜில்லா ஜட்ஜி அபிப்ராயம் கொண்டிருக்கிறபடியால் அவர் அந்த கோவிலுக்காக இந்தவாதிகளுடைய ஸ்வாதீனம் செய்யும்படி உத்திரவு செய்திருக்கவேணுமென்று வாதிக்கிறார்கள். ஆனால் இதுவரையில் எல்லா ஹைகோர்ட்டுகளும் 92-வதுஸெக்ஷன்படி கோவிலினுடைய கிரமமான டிரஸ்டிக்கு ஸுவாதீனம் செய்யலாமே யல்லது மற்றப்படி ஸ்வாதீனம் பெற்றிருப்பவர்களை இஜெக்ட் செய்யக் கூடாதென்று தீர்மானம் செய்திருக்கிறார்கள். அப்படிக்கிருந்தாலும், இந்த இஜாரா செல்லா தென்று ஒரு டிக்லரேஷனாவது மறுபடியும் 1, 2, பிரதிவாதிகள் அதுகளைப்பற்றி தாவா செய்ய வொட்டாமல், செய்திருக்க வேண்டுமென்றும் வாதிக்கிறார்கள். மஹமத் கௌத் ஸாஹெப் *v.* ஷைக் அஹம்மத் ஸாஹெப் (31 Mds. 212) என்கிற கேஸில் பிரதிவாதி தர்மகர்த்தாவை நீக்கி அவன் ஸ்வாதீனத்தில் உள்ளவைகளை வாதியின் ஸ்வாதீனம் ஒப்புவிக்கும்படியாக தீர்மானமாய் இருக்கிறது. ஆனால் அந்த கேஸில் வாதிகளில் ஒருவர் அந்த கோவிலுக்கு ஏற்கனவே ட்ரஸ்டியாக உள்ளவர் ஆகையால் தான் அந்த வாதியினுடைய ஸ்வாதீனம் செய்யும்படி உத்திரவு ஆனது. மேலும் அந்த தீர்மானம் 1863-வது வருஷத்திய 20-வது ஆக்ட்படி இப்போதிய ப்ரொஸீஜர் கோட் படியல்ல. ஆகையால் 3, 4, பிரதிவாதிகளிடமிருந்து ஸ்வாதீனத்தை மாற்றவாவது அவர்களுடைய இஜாரா செல்லாதென்று டிக்லரேஷன் செய்யவாவது கூடாதென்பது என்னுடைய அபிப்ராயம். ஆனால் 3, 4, பிரதிவாதிகளை பார்டிகளாகச்சேர்த்தது கிரமமல்ல வென்று அவர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் தாவாவை தள்ளிவிட்டது சரிதானா வென்கிற கேள்வி இருக்கிறது. இது விஷயத்தைப்பற்றி அபிப்ராய பேதங்கள் விசேஷமுண்டு. ஆர்டர் 1, ரூல் 10, பிரவு 2, இது விஷயமாக கோர்ட்டுக்கும்பார்டிக்கும் விசேஷ அதிகாரமுண்டு. வாதியாகவாவது பிரதிவாதியாகவாவது யாரைச் சேர்த்திருக்கவேண்டிய தவசியமோ அல்லது அந்த ஸூட்டில் ப்ரஸ்தாபமாகும் விஷயங்களை செவ்வையாக விசாரித்து சிக்கறத் தீர்மானம் செய்வதற்கு கோர்ட்டு முன்னிலைக்கு யார் ஆஜராகி இருப்பதவசியமோ அவர்களையும் பார்டிகளாக சேர்க்கலாம். வாதிகள் 3, 4, பிரதிவாதிகளை பார்ட்டிகளாகச் சேர்க்க கோர்ட்டின் அனுமதி கேட்கலாமானால் முன்னமேயே அவர்களை பார்டிகளாகச் சேர்ப்பதற்கு ஆக்ஷேபணை ஒன்றும் உள்ளதாக எனக்குத் தோன்றவில்லை. சொத்துக்களை யாராரிடம் பராதீனம் செய்திருக்கிறார்களோ அவர்களை யெல்லாம் பிரதிவாதிகளாகச் சேர்க்கலாமென்பதுதான் இந்த ரூலுக்கு நியாயமான அர்த்தமாக தோன்றுகிறது. அவர்களை சாக்ஷிகளாக விசாரிக்கலாமென்று ஒரு அபிப்ராயம் சொல்லப்பட்டிருக்

கிறது. அப்படி சாக்ஷிகளாக விசாரிப்பதுமாத்திரம் இந்த விஷயங்களில் கோர்டார் சரியான தீர்மானம் செய்ய போதுமானதாக இராது. ஏனெனில் அவர்களுடைய சாக்ஷிகளேயும், விசாரிக்க வேண்டியதுதான். அவர்களுக்காக வக்கீல்கள் வாதிப்பையும் கேழ்க்கவேண்டியது தான். டிரஸ்டிகள் சொத்துக்களே பராதீனம் செய்துவிட்ட பிறகு அதுகளேப்பற்றி ஒரு சரத்தையும் எடுத்துக்கொள்கிறதில்லே. அவைகளே ஸ்தாபிக்கும் நிமித்தம் சாக்ஷி விசாரிக்கிறதுமில்லே. மேலும் ஸுவாதீனம் அடைந்தவர் சம்மந்தப்படா விட்டால் தீர்மானங்கள் பேதப்படும். இந்தக் கேஸில் பராதீனம் செய்தது அக்ரமம் என்று தீர்மானிக்கப்படலாம். அந்த சொத்துகள் சுவாதீனத்திற்காக வேறு வியாஜ்யம் செய்தால் அதில் பராதீனம் செய்தது சரிதானென்றும், கோயிலே பந்தப்படுத்துமென்றும் தீர்மானிக்கலாம். 92-வது ஸெக்ஷன்கீழ் சூட்டில் செய்யும் தீர்மானம் பின்னே உண்டாகக்கூடிய வியாஜ்ஜியத்திற்கு ரீஸ் ஜுடிகேயடா ஆகுமோ ஆகாதோ என்பதைப்பற்றி இப்போது முடிவான அபிப்ராயம் சொல்ல வேண்டியதில்லே. அப்படி ரீஸ் ஜுடிகேடா ஆகாவிட்டாலும் இதில் பராதீனம் பெற்றவர் பார்டிகளாக சேர்க்கப்பட்டது சரிதான் என்று கொண்டால் பின்வரும் வியாஜ்ஜியத்தில் இந்த தீர்மானம் அவர்களுக்கு விரோதமான முக்கியசாக்ஷியமாகும். ஆகையால் டிரஸ்டிகள் செய்திருக்கிற பராதீனம ப்ரஸ்தாபமாயிருக்கும் கேஸுகளில் ஸ்வாதீனம் பெற்றவர்களே பார்டிகளாகச் சேர்த்து அவர்கள் முன்னிலேக்கு இந்த பராதீனத்தைப்பற்றி தீர்மானம் செய்கிறதுதான் சரியான வழி என்று என்னுடையை அபிப்ராயம். அவர்கள் அவசியமாக சேர்க்கவேண்டிய பார்டிகளாக இராமல் போனுலும் சேர்ப்பது சரிதானென்பதைப்பற்றி எனக்குச் சந்தேகமில்லே. காபர் ஹுஸெயின் கான் ங. யாவர் ஹுஸெயின் என்னும் அலகாபாத் கேஸில் சீப்ஜட்ஜ் ஸர்ஜான் ஸ்டாண்லீ வெளியிட்டிருக்கும் அபிப்ராயங்களும், கலெக்டர் ஆப் பூனு ங. பாய் சஞ்சல்பாய் என்ற கேஸில் பம்பாய் ஹைகோர்ட் தீர்மானமும் ஸஜீத்தர் ராஜா சௌத்ரீ ங. தௌர்மோஹஸ்தாஸ் என்கிற கேஸில் கல்கத்தா ஹைகோட்டு தீர்மானமும் என்ன பிப்ராயத்தை ஒத்திருக்கின்றன. புத்ஸிங்துனியா ங. நிரத்பரன்ருய் கேஸில் ஜஸ்டிஸ் முக்கர்ஜி பராதீனம் பெற்று தர்மத்துக்கு விரோதமான பாத்யதையை உள்ளவர்கள் இப்பேர்ப்பட்ட கேஸில் சரியான பார்டிகளல்லவென்று அபிப்ராயம் கொண்டிருக்கிருர். ஆனல் ஆர்டர் 1-ரூல் 10-ன் ப்ரயோகத்தை அவர் செவ்வையாய் கவனித்ததாக தோன்றவில்லே. அதுவே கேஸில் அவருடன் கூட இருந்த ஜஸ்டிஸ் ஹாரிங்டன் பராதீனம் பெற்றவர்கள் சரியான பார்டிகள் அல்லவென்று சொல்லவில்லே. முந்தின தீர்மானங்கள் அநேகமாய் என்ன பிப்ராயத்திற்கு ஒத்தனவாயிருக்கின்றன. முன்னமேயே நியாயத்தை உத்சேசித்தும், தீர்மானங்கள் ஒன்ருடொன்று பேதப்படாமல் இருக்கவேண்டியதையும் உத்தேசித்து அவர்கள் பார்டியாகத்தான் இருக்கவேண்டியதென்று சொல்லி யிருக்கிறேன். இந்த காரணங்களே எல்லாம் உத்தேசித்து 3, 4 பிரதிவாதிகள் சம்பந்தப்பட்ட மட்டில் ஜில்லா ஜட்ஜ் கேஸை தள்ளிவிட்டிருக்கிற பாகத்தை மாற்றவேணுமாய் என்னுடைய அபிப்ராயம்.

ஜட்ஜிகளுக்குள் அபிப்ராய பேதம் இருப்பதால் கீழ்க்கோர்ட் தீர்மானம் காயப்பட்டு அப்பீல் சிலவுடன் தள்ளப்பட்டிருக்கிறது.

BOMBAY HIGH COURT.

பம்பாய் ஹைகோர்ட்.

நாரன்தாஸ் வ்ரிஜ்புக்கான் தாஸ்—அப்பீல் வாதி.

v.

பெய்ஸரஸ்வதி—அப்பீல் ப்ரதிவாதி

S. A. No. 527 of 1913.

உயில்—உயில் மூலமாய் சொத்து கொடுக்கப்பட்டவர் உயில் எழுதினவர் இறக்கும் போது பிறந்திருக்கவில்லை—பெண்காலம்வரையில் அனுபவம்—நிற்கும் சொத்து தாயாதிகளுக்கு—உயில் எழுதுகிறவர் இறக்கும்போது அவர் பெண்ணுக்கு பிள்ளை இல்லாததால் தாயாதிகள் அடைகிறது.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—மஹாசுக்ராம் என்பவர் 1898-ம் வருஷம் பிப்ரவரி மீ 20உ ஒரு உயில் எழுதினர். அதில் தன்பெண் அவள் காலம் வரை மாதம் ஒன்றுக்கு ரூ. 150-ம் ஒரு வீட்டு வாடகையை அடையவேண்டுமென்றும், தன் சொத்துக்களையெல்லாம் தன் பாரியை பார்வதி என்பவள் அவள் காலபர்யந்தம் அனுபவிக்கவேண்டியதென்றும் சொத்துக்களை தாயாதிகள் பரிபாலித்து வரவேண்டுமென்றும், அவள் காலத்திற்கு பிறகு தன்னுடைய மகளான ஸரஸ்வதிக்கு புருஷப்பிள்ளை அல்லது பிள்ளைகள் பிறந்து அப்பிள்ளை அல்லது அப்பிள்ளைகள் 18-வயது ஆகி அப்போது அவன் அல்லது அவர்கள் நல்ல குணத்துடன் இருக்கும்பக்ஷத்தில் அவனிடத்தில் அல்லது அவர்களிடத்தில் உடனே சொத்துக்களை ஒப்புவித்து விடவேண்டியதென்றும் புருஷ ஸந்ததியேயில்லாவிடில் பெண் ஸந்ததி மாத்திரம் இருந்தால் அப்பெண் அல்லது அப்பெண்களுக்கு அவள் அல்லது அவர்கள் ஸ்வதேச்சையாய் அனுபவித்துக்கொள்ளும்படி அவரவர்கள் அதாவது ஒவ்வொரு பெண்ணும் (ஒன்றுக்கு மேற்பட்டு பெண்கள் பிறந்திருந்தால்) ரூ. 500 பெறும்படியான நகைகளை அடைகிறதென்றும் மற்ற சொத்துக்களை தாயாதிகள் அதாவது சிற்றப்பன் பிள்ளைகள் அல்லது அவர்கள் ஜீவதிசையோடில்லாவிட்டால் அக்காலத்தில் அவர்கள் ஸந்ததியில் பிறந்த புருஷ வார்ஸ்கள் அடைகிறதென்றும் உயில். இந்தப்படி உயில் எழுதிவிட்டு 1898-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் இறந்து போய்விட்டார். மனைவி 1907-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 13உ இறந்து விட்டாள். ஸரஸ்வதிக்கு தகப்பன் இறக்கும்போது பிள்ளை கிடையாது. ஆனால் 1907-ம் வருஷம் டிஸம்பர் மீ 7உயில் ஒரு பிள்ளை பிறந்தது.

அதன்மேல் 1909-ம் வருஷத்தில் ஸரஸ்வதியும் அவள் குழந்தை மைனரும் உயில் இன்னதென்று தீர்மானிக்கவும் அந்த சொத்துக்களை பரிபாலிக்க அதிகாரம் பெறவும் தாயாதிகள்பேரில் தாவா செய்தாள்.

அசல் கோர்ட் தீர்ப்பு.—உயில் எழுதுகிற காலத்தில் ஸரஸ்வதியின் மகன் பிறந்திராததினால் அவனை வார்ஸாக நியமிக்கப்பட்டவரையில் அந்த உயில் செல்லத்தக்கதல்லவென்றும் எந்த சந்தர்ப்பம் நேர்ந்தால் தாயாதிகள் சொத்தை அடையக்கூடுமோ அந்த சந்தர்ப்பம் நேராததாலும் நேருவது அசாத்யமாய் விட்டபடியாலும் உயிலையும் தாயாதிகளையும் யோசிக்கிறவரையில் அந்த தாயாதிகளுக்கும் அந்த சொத்து கிடையாதென்றும் வழக்கப்படி அட்மினிஸ்ட்ரேஷன் டிக்ரி கொடுக்கப்பட்டது. அதன்மேல் ஜில்லா கோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்பட்டது. ஜில்லா ஜட்ஜியும் கீழ் கோர்ட்டு தீர்ப்பை காயம் செய்துவிட்டார். அதன்மேல் இக்கோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்பட்டது.

ஹைக்கோர்ட் தீர்ப்பு.—உயில் எழுதும் காலத்தில் உயில் தானம் பெறுபவர் உயிரோடிருக்கவேண்டும். அப்படிக்கு இல்லாத

தானம் செல்லாது. ஆகையால் ஸரஸ்வதியின் மகனுக்கும் சொத்து[illegible] சம்பந்தமில்லை. சொத்துக்களை பெ[illegible]ர் இறந்த பிறகு புருஷ ஸந்ததி இல்லாததினால் ஸரஸ்வதி ஹிந்து லாப்படி ஸ்வதந்திரவார்ஸாதலால் வழக்கப்படி அட்மினிஸ்ட்ரேஷன் டிக்ரி கீழ்கோர்ட்டார் கொடுத்திருக்கிறார்கள். உயில் எழுதினவர் எண்ணத்தை யோசித்தால் அத்தீர்ப்புகள் சரியல்ல. உயிலில் சொல்லி இருப்பதாவது: ஸரஸ்வதிக்கு பிள்ளை பிறந்து அப்பிள்ளை 18-வயதுக்கு நல்ல குணமுள்ளவனாகயிருக்கும் பக்ஷத்தில் மாத்திரம் சொத்துக்களை தாயாதிகளிடமிருந்து ஒப்பிவித்துக் கொள்ளுகிறதென்றுமிருப்பதாலும் கிரமமாக பிள்ளை யோக்கியனாகவே இருந்து சொத்துக்களை அடையும் பக்ஷத்தில் பெண் இன்னவிதமான பாத்தியதைகளை சொத்துக்களிலிருந்து அடைகிறதென்று உயில் எழுதினவர் சொல்லி இராததாலும் உயில்படி ஸரஸ்வதிக்கும் தாயர்திகளுக்கும் சொத்தில் உயில் எழுதினவரால் கண்டிருக்கும் ஸ்வதந்திரங்களை யோசிக்கும் காலத்தில் பேரன் யோக்கியனாக இருந்தால் அனுபவிக்கவேணுமென்றும் அல்லது தன் சிற்றப்பன் ஸந்ததிகளில் அச்சமயத்தில் ஜீவதசையோடிருக்கிறவர்கள் அடைகிறதென்று இருக்கிறதே தவிர ஸரஸ்வதியடைகிற விஷயத்தில் அபிப்ராயப்பட்டவனாக இல்லை. ஸரஸ்வதியின் பிள்ளைக்கோ சொத்துக்களை அடையும் ஸ்வதந்திரம் உயில்படி கிடையாது. ஆகையால் உயில்படி ஸரஸ்வதி மாதம் ரூ. 150-ம் ஒரு வீட்டு வாடகையும் அவள் காலபரியந்தம் அடைகிறதென்றும், சொத்துக்கும் அவளுக்கும் ஸம்பந்தம் கிடையாதுதென்றும், சொத்துகளை பிரதிவாதிகள் தான் அடைய ஸ்வதந்திர வார்ஸகளென்றும், டிக்ரி செய்திருக்கிறோம். கோர்ட்டு சிலவுகள் இருதிரத்தாரும் தாவா சொத்துக்களிலிருந்து அடைகிறது.

MADRAS HIGH COURT.

சென்னை ஹைகோர்ட்.

முக்கியமான தீர்ப்புகளின் சுருக்கம்.

S. A. No. 434 of 1913.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஓல்டுபீல்டு.
மிஸ்டர் டயாப்ஜி.

ஒரு இந்து குடும்ப தகப்பன் தன் பையன் மைனராயிருக்கும்பொழுது ஒரு உயில் எழுதிவைத்தான். அந்த உயிலின் ஸாரமென்னவென்றால் தன் ஸொத்தை மூன்றுவது மனுஷன் நிர்வாகம்செய்து, அதன் வரும்படியில் ஒருபாகத்தை தன் பிள்ளை அடைய ஏற்படுத்தி அந்தப் பிள்ளைக்கு பிற்பாடு அந்த ஸொத்து ஒரு தருமம்செய்ய அடையவேண்டுமென்பது. மைனர் பையன் அந்த உயில் செல்லாதென்றும், ஸொத்து தன்னைச் சேரவேண்டுமென்றும் பிராது செய்தான். மைனர் பையனுக்குப் பிற்பாடு தான் பிராது செல்லத் தகுந்ததென்றும், அதுவும் பையனுடைய நெருங்கிய தாயாதிகளால் பிராது செய்யப்படவேண்டுமென்றும், எந்த தருமத்திற்கு இந்த ஸொத்து அடையவேண்டுமோ அந்த தருமத்தின் தர்மகர்த்தாக்களும் இந்தப் பிராதில் சேர்க்கப் படவேண்டுமென்றும் தீர்ப்பு செய்யப்பட்டது.

மிஸ்டர் ஸ்ரீனிவாஸ கோபாலசாரியார் வாதிக்கும்.

மிஸ்டர் டி. ரெங்காசாரியார் பிரதிவாதிக்கும் ஆஜரானார்கள்.

A. S. No. 164 of 1911.

ஜட்ஜிகள:—ஸர் ஸங்கரன் நாயர்.
மிஸ்டர் ஸ்பென்ஸர்.

ஒரு ஹிந்து விதவை ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் செய்துகொண்டாள். விதவை தான் எடுத்துக்கொள்ளும் ஸ்வீகாரத்தைத் தடுக்காமலிருப்பதற்காக தன் தகப்பனுக்கு ஸ்வீகாரப்

பிள்ளையை விட்டு ஒரு ப்ரோநோட் எழுதிக் கொடுக்கச்சொல்லிருந்தாள். விதவையின் தகப்பன் பணத்துக்கு பிராது செய்தான். இது சட்டப்படிக்கு நியாயமல்லவென்றும், விவகார ரீதிக்கு விரோதமென்றும் கருதி ஜட்ஜிகள் பிராதை தள்ளிவிட்டார்கள்.

வாதிக்கு மிஸ்டர் டி ஆர். ராமச்சந்திர அய்யரும், பிரதிவாதிக்கு மிஸ்டர். ஆர். சடகோபாசாரியாரும் ஆஜரானுர்கள்.

S. A. 707 of 1913.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஸ்பென்ஸர்.
மிஸ்டர் ஹேனே.

ஒரு பாகமாகாத குடும்பத்தில் ஒருவன் இறந்துபோக அவன் மனைவிக்கு ஜீவனும்சமாக சில நிலங்கள் கொடுக்கப்பட்டன. பிறகு அக்குடும்பத்தில் ஸஹோதரர்களுக்குள் பாகமானது. இந்த ஸஹோதரர்களுக்குள் ஒருவன் இறந்துவிட்டான். முதல் விதவையாகிய ஜீவனும்சம் பெற்றுக்கொண்டவளும் இறந்துவிட்டாள். இரண்டாவதுவிதவை முதல் விதவைக்குக் கொடுத்திருந்த நிலங்கள் தனக்குச் சேர வேண்டுமென்று பிராதுசெய்தாள். இந்து லாப்படி செல்லாது என்று தீர்மானம்.

வாதிக்கு மிஸ்டர். என். கோபாலாசாரியாரும், பிரதிவாதிக்கு மிஸ்டர். C. V. அனந்த கிருஷ்ண அய்யரும் ஆஜரானுர்கள்.

A. S. No. 47 of 1911.

ஜட்ஜ்கள் :—சீப்ஜட்ஜ், மிஸ்டர் சேஷகிரி அய்யர்.

ஒரு மிராசுதார் ஒரு நிலத்தை ஒரு குடியானவனிடம் குத்தகைக்கு விட்டிருந்தார். டிரான்ஸ்பர் ஆப்ப்ராபர்டி ஆக்ட், ஸெக்ஷன் 108, கிளாஸ் E-ப்படி குத்தகைக்காரன் ஸர்வசுதந்தரத்துடன் நிலத்தை குத்தகைக்கு அனுபவிக்க பாத்யமுள்ளவன். வேறொரு குடியானவன் தனக்கு நிலத்துக்கு குத்தகை பாத்யமிருக்கிறதென்று இவனை மறுக்க, இவன் குத்தகை தள்ளிக்கொடுக்கவேண்டுமென்று பிராது செய்தான். மறுத்த குடியானவனுக்கு பாத்யமில்லையென்று ஏற்பட்டபிறகு மறுத்ததினால் குத்தகைக்குறைக்கும்படி கேட்பது நியாயமானதல்ல என்று தீர்மானம்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர். ஒல்டு பீல்டு.
மிஸ்டர். சேஷகிரி அய்யர்.

ஸிவில் ரிவிஷன் மனு—நெம்பர்

579-முதல் 571 of 1911.

1908 ஹு ஜுன் 30 ந் தேதி ஒரு மிராசுதாரர் தன் குடியானவன் உத்தரவன்னியில் நிலத்தைப் பயிர்செய்ததற்காக நஷ்டத்துக்கு முன்ஸீப் கோர்ட்டில் ப்ராது செய்தான். சென்னை எஸ்டேட் லாண்டு ஆக்டி, 1908 ஜுலை மீ 1-ந் தேதிதான் அமுலுக்கு வந்தது. ஜில்லா முன்ஸீப் அந்த கேஸை விசாரிக்க தமக்கு பாத்யமில்லையென்று ரெவினியு கோர்ட்டுக்கு அனுப்ப, அது அப்பீலுக்கு வந்ததும் அப்பீல் ஜட்ஜி, ஜில்லாமுன்ஸீப் இக்கேஸை விசாரிக்க ஸ்வதந்தர மிருக்கிறதென்று ஜில்லா முன்ஸீப் கோர்ட்டுக்கு அனுப்பிவிட்டார். ஜில்லா முன்ஸீப் இந்தக் கேஸை விசாரிக்கத் தமக்கு பாத்தியமில்லையென்று மறுபடியும் அனுப்பினர். அது ஹைகோர்ட்டு அப்பீலுக்கு வந்தது. ஜில்லா முன்ஸீப் அதை விசாரிக்கக் கடமைப்பட்டவரென்று சொல்லி ஜில்லா முன்ஸீபை விசாரிக்கவேண்டுமென்று தீர்மானம்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் சதாசிவய்யர்,
மிஸ்டர் நேபியர்.

A. S No. 319 of 1913.

ஒரு ஹிந்து விதவைக்கு ஜீவனும்ச தாவா செய்யும் காலத்தில் அவள் புருஷனுடைய சொத்து பாகமதிப்பை ஆதாரங்கொள்ள வேண்டுமே யொழிய புருஷன் இறந்தகாலத்தில்

அவனுடைய விகிதத்திற்குறிய சொத்துபாகத்தின் மதிப்பைக் கவனித்து ஜீவனும்ச துகையை நிதானிக்கக் கூடாதென்று தீர்மானிக்கப் பட்டது.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் அயிலிங்,
மிஸ்டர் ஹானு.

S. A. No. 1010 of 1913.

ஒரு குடும்பத்தில் பாகமான பிறகு அந்த குடும்ப பாகஸ்தர்களில் ஒருவன் பொதுக் கடன் ஏதாவது இருக்கு என்று கொண்டு வந்தால் மற்ற பாகஸ்தர்களையும் அந்த பொதுக்கடனுக்கு உட்படுத்துவது செல்லாது.

கோர்ட்டில் அரெஸ்டு செய்யப்பட்டது நியாய மாகுமா?

வீராஸாமி செட்டி என்பவர் ஜவுளி வியாபாரம் செய்து நஷ்டமடைந்தார். அவர் பேரில் ரூ. 26000-க்கு டிக்கிரி ஆகியிருந்தது. இன்ஸால்வென்ஸி பெட்டிஷன் கொடுப்பதற்காக கோர்ட்டுக்குள் வந்தார். அன்று மணி 10-க்கு அரெஸ்டு செய்யப்பட்டார். தாம் அரெஸ்டு செய்யப்பட்டது நியாயமில்லை யென்று ஜட்ஜி பேக்வெல் முன்னிலையில் வாதித்தார். கோர்ட்டு திறக்கிறது 11-மணிக்கு ஆகையாலும், மேலும் கோர்ட்டில் விவகாரங்கள் ஒன்றும் நடக்கவில்லை யாகையாலும் அரெஸ்டு செய்யப்பட்டது நியாய மென்றார்.

ஒரு ஜேர்மன் வியாபாரியின் பிராது.

இங்லாந்துக்கும் ஜெர்மனிக்கும் யுத்தம் ஆரம்பிக்குமுன் ஒரு ஜெர்மன் வியாபாரி சென்னை பார்ஸன்ஸ் கம்பெனிபேரில் ரூ. 1,800-க்கு பிராது செய்திருந்தான். செப்டம்பர்மீ 8-ந் தேதி அந்தக் கேஸ் ஆரம்பிக்கப்பட்டது. இப்போது யுத்தம் நடக்கிறதினால் அந்த கேஸ் எடுத்து விசாரிக்கப் படமாட்டா தென்றும், சண்டைமுடிந்து ஸமாதானம் ஆனபிறகுதான் கவனிக்கப் படுமென்றும் தீர்மானித்து கேஸ் பதிவு லிஸ்டிலிருந்து எடுத்து விடும்படி ஸ்மால் காஸ் கோர்ட்ப்ரதம ஜட்ஜி உத்தர விட்டார்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் அயிலிங்.
மிஸ்டர் சேஷகிரி அய்யர்

S. A. No. 2203 of 1912.

ஒரு கோவில் தர்மகர்த்தா அந்தக்கோவிலில் குடியிருந்த ஒருவனைத் தள்ளவேண்டுமென்று பிராது செய்தார். மேலும் பிராதுசெய்யுமுன் அந்தக் கோவில் மற்ற தர்மகர்த்தாக்கள் தங்களோடசேரவேண்டு மென்றுநோட்டீஸ்மூலமாகத் தெரிவித்திருக்க, அதை கவனியாமல் குடியிருந்தவன் போகாமலிருக்கிறதற்கு மற்ற தர்மகர்த்தாக்கள் ஒரு அதிகாரப்பத்ரம் கொடுத்து விட்டார்கள்.

மத்யஸ்தம்.

ஒரு கேஸை மத்யஸ்தத்திற்கு விட்டு மத்யஸ்தர் சொல்லும் தீர்மானத்தில் ஒரு பாகம் க்ரமமாயிருந்து, மற்ற பாகம் க்ரமமாயிராத பக்ஷத்தில், அந்த 2 பாகங்களும் பிரிக்கக் கூடியவைகளாயிருந்தால், க்ரமமா யில்லாத பாகத்தைத் தள்ளிவிட்டு சரியாயுள்ள பாகத்தை எடுத்துக்கொள்ள வேண்டியதுதான். ஒரு மத்யஸ்தர் கேஸை விசாரிப்பதில் விவாதத்திலுள்ள விஷயங்களை சரியாய் விசாரிக்காமல் தீர்ப்பு சொல்லும் பக்ஷத்தில் அந்தத் தீர்ப்பு சரியான தீர்ப்பாகாது. இப்படிப்பட்ட தீர்ப்பு சொல்வதில் மத்யஸ்தர் யோக்யமாயில்லை யென்றுவது அல்லது பக்ஷபாதமா யிருந்தாரென்றுவது ரூபிக்கவேண்டியது அனுவச்யம். கேஸ்களில் மத்யஸ்தம் செய்கிறவர்கள் அவைகளை விசாரிக்கும்போது பின்னால் உபயோகத்திற்காக அப்போதைக்கப்போது குறிப்புகள் எழுதி வைத்துக்கொள்ளவேண்டும். ஆனால் விசாரணை நடக்கும்போது மத்யஸ்தர் குறிப்புகள் வைத்துக்கொள்ளாமலிருந்து, அதற்கு கக்ஷிக்காரரும் ஆக்ஷேபிக்காமலிருந்து விட்

டால், மத்யஸ்தர் தீர்ப்பு சொன்ன பிறகு, அந்தத் தீர்ப்பு சக்ஷிக்காரருக்கு த்ருப்தி இல்லாமல் மத்யஸ்தர் குறிப்புகள் எழுதி வைத்துக்கொள்ள வில்லையென்று முகாந்திரம் சொல்லி, அவருடையதீர்ப்பு அங்கீகாரம்செய்யத் தக்கதில்லை யென்று வாதிக்கக்கூடாது. ஒரு கேஸில் மத்தியஸ்தராக இருந்தவரை அந்தத் தீர்ப்பைப்பற்றிய விவாதத்தில் ஸாக்ஷியாக விசாரிக்கலாம். இன்னும் மத்யஸ்தர் தீர்ப்பு சொல்லுவதில் பக்ஷபாதமில்லாமலும், யோக்யதையாயும் நடந்திருக்கிறாரா வென்று நிஷ்கர்ஷை செய்யவேண்டியிருந்தால், அவருடைய ஸாக்ஷயத்தை கண்டிப்பாய் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் அவர் சொல்லும் ஸாக்ஷயத்தை வேறு விதமாக உபயோகப்படுத்தக்கூடாது. அதாவது, அவர் தீர்மானம் செய்யக்கூடிய விஷயங்களில் அவர் செய்தது பிசகு என்று ரூபிப்பதற்காக அவருடைய ஸாக்ஷயத்தைஉபயோகப்படுத்தக்கூடாது. மோசடியாய் செய்திருந்தாலொழிய ஒரு ஹிந்து அவிபக்த குடும்பத் தலைவர் ஒரு கேஸை மத்யஸ்தத்திற்கு விடும் பக்ஷத்தில் அதற்கு இதர பாகஸ்தர்களும் கட்டுப்பட்டவர்களாவார்கள்.

மறுபடியும் ஒன்றுசேர்தல்.

ஒரு குடும்பத்தில் பாகம் ஏற்பட்டு பாகஸ்தர்கள் மறுபடியும் ஒன்றுசேரும்பக்ஷத்தில், அவிபக்த குடும்பமாயிருந்தபோது ஒவ்வொரு பாகஸ்தருக்கும் என்ன பாத்யதை உண்டோ அந்த மாதிரி, பிரிந்து மறுபடியும் சேரும் பாகஸ்தர்களுக்கு பாத்யதை ஏற்படாது. மறுபடியும் ஒன்று சேரும்போது அவரவர்கள் என்ன ஸொத்துகள் போடுகிறார்களோ அதை பொருக்கும். ஒன்று சேர்ந்து மறுபடியும் பிரியும் பக்ஷத்தில், பிரிவினையில் ஏற்படும் ஸொத்தின் வீதம், ஒன்று சேரும்போது ஸொத்து வீதம் என்ன போட்டார்களோ அப்படித்தான் இருக்கும். அவிபக்த குடும்ப பாகஸ்தர்களுக்கும், பாகமாய் மறுபடியும் சேரும் பாகஸ்தர்களுக்கும் சில வித்யாஸங்கள் உண்டு. அவிபக்த குடும்பத்திலுள்ள பாகஸ்தர்கள் கோபார்ஸனர்கள், அதாவது "ஸமபாகஸ்தர்கள்" ஆவார்கள், ஒரு தடவை பிரிந்து மறுபடியும் ஒன்று சேரும் பாகஸ்தர்களோ, 'டெனண்ட்ஸ் இன்காமன்,' அதாவது "பொதுவடை பாகஸ்தர்கள்" ஆவார்கள்.

பிரிவினை ஆசாத குடும்பத்தில் ஒரு பாகஸ்தனுக்கு பிள்ளை இல்லாத பக்ஷத்தில் அவனுடைய பாகம் இதர பாகஸ்தர்களுக்குப் போகிறது. பிரிவினையாகி பாகஸ்தர்கள் மறுபடியும் ஒன்று சேரும்பக்ஷத்தில், அதில் ஒரு பாகஸ்தர் இறந்து போனால் அவருடைய வார்ஸுக்கு அவருடைய ஸொத்துகள் சேரும். பிரிவினையான குடும்பத்தில் மறுபடியும் ஒன்று சேர்ந்ததாக யாராவது வாதிக்கும் பக்ஷத்தில், அப்படி ஒன்று சேர்ந்ததை அவரே ரூபிக்கவேண்டிவரும்.

ஈஸ்மெண்ட்.

பக்கத்து நிலத்திலிருந்து ஒரு வீட்டு ஜன்னல்களின் வழியாய் வரும் வெளிச்சத்திற்குள்ள ஈஸ்மெண்ட் பாத்யதையை வெளிச்சத்தை அளந்து சொல்ல முடியாது. ஜன்னலுள்ள வீட்டில் குடியிருப்பவர்களோ அல்லது வ்யாபாரம் செய்கிறவர்களோ ஸௌகர்யமாய் குடியிருப்பதற்கு எவ்வளவு வெளிச்சம் வேண்டுமோ அவ்வளவுக்குத்தான் பாத்யமுண்டு. பக்கத்து நிலத்துக்காரன் ஜன்னலை அடைப்பதால் வீட்டுக்காரர்களுக்கு தொந்திரவு உண்டானலொழிய ஈஸ்மெண்ட் பாத்யதைக்கு கெடுதி நேரிட்டதாக எண்ணக்கூடாது.

போக்யமும் வரியும்.

ஒரு வீடு போக்யப் பத்ரத்தில் முனிஸிபாலிட்டி வீட்டுவரிபோக பாக்கி வரும்படியே வட்டி ஈடாக அனுபவித்துகொள்கிறது என்று

கண்டிருந்தது. பிறகு முனிஸிபாலிட்டியார் தண்ணீர்த் தீர்வை போட்டார்கள். இந்தத் தீர்வையை யார் கொடுக்கிறதென்று விவாதம் ஏற்பட்டதில், போக்யக்காரனே கொடுக்க வேண்டியதென்று சென்னை ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். இப்படியே குழாய் வைத்த செலவையும் போக்யக்காரனே ஒப்புக் கொள்ள வேண்டியதுதான்.

லஞ்சம் கொடுப்பதற்காக கடன் வாங்குவது.

லஞ்சம் கொடுப்பதற்காக வாங்கின கடனை திரும்பிப் பெருவதற்கு கடன் கொடுத்தவன் வ்யாஜ்யம் போட்டால் அது செல்லத்தக்க தல்ல. ஆனால் இப்படி கடன் வாங்கினவன் முதல் கோர்ட்டில் லஞ்சம் கொடுப்பதற்காக வாங்கினது என்று சொல்லாமல் அதை அப்பீல் கோர்ட்டில் சொல்லும் பக்ஷத்தில் அப்பீல் கோர்ட்டார் அதை ஒப்புக்கொண்டு விசாரிக் கக்கூடாது.

குடும்பத் தலைவனுக்காக எதிர்வாதம்

ஒரு அவிபக்த குடும்பத்தலைவன் ஒரு க்ரிமினல் கேஸில் அகப்பட்டுக்கொண்டு அவனை விடுவிக்க எதிர்வாதமாட செலவுக்குப் பணம் கடன் வாங்கும் பக்ஷத்தில் அது அவச்யமான கார்யத்திற்கு கடன்வாங்கினதாகும். ஆகை யால் இதர பாகஸ்தர்களை கட்டுப்படுத்தும்.

அதிகாரப் பத்ரம்.

ஏஜெண்டு முதலாளியை கட்டுப்படுத்தி பிறருக்கு ஜாமீன் இருக்கலாமென்றாவது அல் லது பிறரோடுசேர்ந்து ப்ராமஸரி நோட்டு போன்ற பத்ரங்கள் எழுதிக் கொடுக்கலா மென்றாவது முதலாளியால் ஏஜெண்டுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரபத்ரத்தில் வ்யக்த மாய் சொல்லியிருந்தாலொழிய ஏஜண்டுகள் முதலாளிகளைக் கட்டுப்படுத்தமுடியாது.

பேர் இரவலான வியாபாரம்.

ஒரு கேஸில், ஒரு வீட்டிற்கு ஸொந்தக் காரன் ஒருவனிருக்க வேறொருவன் பெயரால் பேர் இரவலாய் வாடகைசீட்டு ஏற்பட்டிருந் தாலும், வாடகையை நிஜ ஸொந்தக்காரனுக் குக்கொடுத்து விடும் பக்ஷத்தில், பேர் இரவ லாய் சீட்டு வாங்கிக்கொண்டவனுக்கு மறு படியும் கொடுக்கவேண்டியதில்லை.

தண்டத் தீர்வை.

வாதி தமக்கு ஸொந்தமில்லாத நிலத்தில் ஆக்ரமித்ததற்காக ஸர்க்காரில் அந்த நிலத்தை வாதி விட்டுவிட வேண்டுமென்று நோட்டீஸ் கொடுத்து, மதராஸ் லாண்ட் என்க்ரோச் மெண்ட் ஆக்ட்,5–வது ஸெக்ஷன்படி தண்டத் தீர்வையும் போடப்பட்டது. அதற்கு ஆறு மாஸத்திற்குப் பிறகு வாதி அந்த நிலம் தம் முடையதென்றும், தாம் செலுத்திய தண்டத் தீர்வையை திரும்ப அடைய வேண்டுமென் றும் வ்யாஜ்யம் போட்டால், அந்த வ்யாஜ்யம் ஷெடி ஆக்ட் 14-வது ஸெக்ஷன்படி காலாவதி யாகி விடுகிறதால், அது செல்லாது.

14 மதராஸ் லா டைம்ஸ் 572.

மைனர் பாகஸ்தர்கள் வ்யாஜ்யம் போடுவதற்க்கு காலாவதி.

ஒரு அவிபக்த குடும்பத்தின் தலைவர் தமது மகன், தமது ஸகோதரன் மகன் ஆகிய இந்த இரண்டு மைனர்களுடைய கார்டியனாக இரு ந்து ஒரு ஸொத்தை விற்பனை செய்தால், அப் படிச் செய்த விற்பனையை ரத்து செய்வதற்கு வ்யாஜ்ய மூலமானது ஒவ்வொரு மைனருக் கும் வெவ்வேறாக இருக்கிறது. வ்யாஜ்யத்துக் குள்ள ஆதாரங்களும் வெவ்வேறானவை. மைனர்களில் மூத்தவர் மேஜரான 3-வருஷத் துக்குப்பிறகு வ்யாஜ்யங்கொண்டு வந்தது காலாவதியாகி விட்டதென்று சொல்லலாமென் றாலும், மற்ற மைனருக்கு காலாவதியாகி விட் டதென்று சொல்வதற்லேலை. அவர் தாம் மேஜ

ரான மூன்று வருஷத்துக்குள் ஷை விற்பனை யை ரத்து செய்ய வ்யாஜ்யங்கொண்டு வரலாம்

அபராதம் செலுத்துவதற்கு தகப்பன் கடன் வாங்குதல்

ஒரு க்ரிமினல் கேஸில் விதிக்கப்பட்ட அபராதத்தைச் செலுத்துவதற்காக ஒரு தகப்பன் கடன் வாங்கினல் அந்தக் கடன் மகனைக் கட்டுப்படுத்தாது. அந்தக் கடனை நகை அடகு வைத்து வாங்கியிருந்து, அந்த நகையை மீட்க ஒரு ஸொத்தை அடமானம் செய்திருந்து, ஸொத்தை அடமானம் வாங்கியிருந்தவர் கேஸின் தன்மையை விசாரிக்காமலும், நகை அடகுவைத்திருந்ததின் காரணத்தை விசாரிக்காமலும் இருந்தால், ஸொத்தை அடமானம் செய்தது மகனைக் கட்டுப்படுத்தாது.

15 மதராஸ் லா டைம்ஸ் 372.

மைனர் விதவையும், புருஷன் பட்டிருந்த கடனும்.

ஒரு ஜட்ஜ்மெண்ட் டெட்டர் (Judgment debtor) அதாவது கடன் வாங்கியிருந்துகோர்ட்டால் கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று தீர்ப்புக் கொடுக்கப்பட்டிருந்தஒருவர் தீர்ப்பு சொன்னதற்குப் பிறகு இறந்துபோய் விட்டார். அதன்மேல் நிறைவேற்று நடவடிக்கையில் அந்த ஜட்ஜ்மெண்ட் டெட்டரின் இரண்டு விதவைகளையும் அவருடைய லீகல் ரெப்ரெஸெண்டடிவ்வாக சேர்த்து நடவடிக்கை நடந்துவந்தது. விதவைகளின் ஒருத்தி மைனராயிருந்தாள். மற்றவள் தனக்குள்ள பாத்யதையை ஒரு அன்யருக்குப் பராதீனம் செய்துவிட்டாள். மைனர் விதவை மேஜராக இருந்தால் எப்படி நடக்குமே அப்படி நிறைவேற்று நடவடிக்கைகள் நடந்துவந்து ஜட்ஜ்மெண்ட் டெட்டருடைய ஸொத்துக்கள் கோர்ட்டில் ஏலத்தில் விற்கப்பட்டன. ஜட்ஜ்மெண்ட் க்ரெடிடர் அதாவது கடன் கொடுத்து கடனுக்காக கோர்ட்டில் தீர்ப்பு வாங்கியிருப்பவருக்கும், கோர்ட் ஏலத்தில் ஸொத்தை வாங்கினவருக்கும், இரண்டு விதவைகளில் ஒருத்தி மைனரென்பதும், இன்னெருத்தி தனது பாத்யதையைப் பராதீனம் செய்திருந்தாள் என்பதும் தெரியும். அப்படியானல் அந்த கோர்ட் ஏலவிற்பனை செல்லாது மைனர் விதவை ஸொத்தில் தனக்குச் சேர வேண்டிய பாகத்துக்கு வ்யாஜ்யம்போட அவளுக்கு பாத்யதையுண்டு. லிமிடேஷன் ஆக்ட், 12-வது ஸெக்ஷனும், 166-ஸெக்ஷனும் இந்தக்கேஸுக்கு ஏற்கமாட்டா.

கல்யாணமும், அவிபக்த குடும்பத்தில் பாகம் செய்துகொள்ளலும்.

ஹிந்துமதத்தைச்சேர்ந்த ஆண்பிள்ளைகளுக்கு கல்யாணம் செய்வதென்பது ஒரு அவச்யமான ஸம்ஸ்காரமாகும். ஒரு அவிபக்த குடும்பத்தின் பாகஸ்தர்களில் சிலருக்கு குடும்பச் செலவில் கல்யாணமா யிருந்தால், பாகமாகும் போது, கல்யாணமாகாத பாகஸ்தர்களுக்குக் கல்யாணச் செலவுக்காகவேண்டிய ஏற்பாடுசெய்து வைக்கவேண்டியது அவச்யமாகும். (ஜட்ஜ்கள் ஸுந்தரய்யர், ஸ்பென்ஸர் ஆகிய இவர்களின் அபிப்ராயம்). கல்யாணமென்பது ஒரு ஹிந்துவுக்கு ஒரு அவச்யமான ஸம்ஸ்காரமாகாது. ஆகையால் அவிபக்த குடும்ப ஸொத்து பாகமாகு முன், சில பாகஸ்தர்களுக்கு குடும்பச் செலவில் கல்யாணமாயிருக்கிற தென்பதை யாதாரமாகக்கொண்டு, கல்யாணமாகாத பாகஸ்தர்களுக்கும் பாககாலத்தில் கல்யாணச்செலவுக்குப்பணம் எடுத்து வைக்கவேண்டுவென்று சொல்வதற்கு அவர்களுக்கு பாத்யமில்லை (ஜட்ஜ ஸதாசிவய்யருடைய அபிப்ராயம்.)

1911-ம் ஷ எஸ். எ., நெம்பர் 355 மதராஸ் ஹைகோர்ட்.

மைனர் யார் வசமிருப்பது என்பது.

ஆறு வயஸுள்ள ஒரு மைனர் பையனை அநேகமாய் பிறந்தது முதல்கொண்டே அவனது தாயைப் பெற்ற பாட்டியும் அவளுடைய

புத்ரனும் பராமரித்து வந்தார்கள். அந்தக் காலத்தில் மைனருடைய பாட்டனார் அந்த மைனருடைய பராமரிப்புக்காக கொஞ்சமும் பண உதவி செய்யவில்லை. அவனுக்காக வேறு விதமாக ஒரு உதவியும் செய்யவில்லை. அப்படியானால் மைனருடைய பாட்டியும் அவளுடைய மகனும் மைனருடைய க்ஷேமத்துக்காகத் திருப்திகரமான ஏற்பாடுகள் செய்து வரும் வரையில் மைனருடைய பாட்டனாருக்கு எதிரிடையாக மைனருடைய பாட்டியே மைனரை தன்வசம் வைத்திருக்க பாத்தியமுள்ளவளாவாள்.

ஸ்த்ரீதனம்.

ஒரு குடும்பத்தில் 200 ஏகரா நிலமிருந்தது. தகப்பன் தன் குமாரத்திக்கு விவாகமாய் 40-வருஷத்திற்கு பிறகு 8 ஏகராநிலம் ஸ்த்ரீதனமாக எழுதிவைத்தார்.

சேர்ந்த குடும்பத்தில் கன்னிகைக்காவது, அல்லது கன்னிகைக்கும் வரனுக்குமாவது கொடுக்கப்படும் ஸ்த்ரீ தனமும், இனமும், கிரமமான தொகையாக விருந்தால், மற்ற மெம்பர்களேயும் கட்டுப்படுத்து மென்றும், இந்த அனுஷ்டானம் செல்லுபடியுள்ளதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (2) ஸ்த்ரீதனமாக கொடுக்கப்படவேண்டிய சொத்து ஹிந்துலாவில் பணமும் நகையுமாக மட்டிலுமிருக்கவேண்டுமென்பது அவசியமல்ல, ஸ்தாவர சொத்தாகவுமிருக்கலாம். (3) குடும்பத்திற்கு 200 ஏக்ரா விருக்கும்போது, 8 ஏக்ரா கொடுத்தது கிரமந்தான். (4) விவாகமான 40 வருஷத்திற்கு பிறகு ஸ்த்ரீதனம் கொடுத்ததை முன்னிட்டு அது செலாமணியாக மாட்டாதென்று சொல்லமுடியாது. 21 மதராஸ் லா ஜர்னல், 24-ம் பக்கம்.

மனைவியின் ஜீவனும்சமும், கடன் கொடுத்தவர் ஜப்தி செய்தலும்.

ஒரு ஹிந்துஸ்த்ரீ ஒரு அவிபக்த ஹிந்துக் குடும்பத்தில் மானேஜராக இருக்கும் தனது புருஷன்மேல் ஜீவனும் சத்துக்கு வ்யாஜ்யம் போட்டு டிக்ரி வாங்கிக்கொண்டாள். இந்த ஜீவனும்சம் குடும்ப சொத்துக்களிலிருந்து கொடுக்கும்படியாகத் தீர்ப்பாயிற்று. இந்த டிக்ரீக்கு முன்னால், புருஷனுக்கு கடன் கொடுத்திருந்த ஒருவர் கொடுபடவேண்டிய கடனுக்காக அதே சொத்துக்களை ஜப்திசெய்திருந்தார். ஜீவனும்ச டிக்ரீக்குப் பிறகு ஷை- கடனுக்காக சொத்துக்கள் விற்கப்பட்டன இந்த சொத்துக்களுக்கு யாருக்கு முன்பாத்யதையுண்டென்றால் கடன் கொடுத்தவரைவிட அந்த ஹிந்து மனைவிக்குத்தான்முன் பாத்யதை அதிகமாக இருக்கிறது.

மதராஸ் ஹைகோர்ட், 1912ளு எஸ். எ. நம்பர் 1270.—பி. வ.

அன்யதேச சட்ட குறிப்புகள்.

ஒரு ஸ்த்ரீயும் புருஷனும் விபசாரம் செய்தார்கள். மாஜிஸ்ட்ரேட் முன் ஆஜர்படுத்தப்பட்டார்கள். மாஜிஸ்ட்ரேட் இவர்களில் ஒருவரைமாத்ரம் தண்டித்து மற்றொரு வரை விடுதலை செய்யவேண்டுமென்றார். எந்தக் கேஸிலும் இம்மாதிரியான அனுஷ்டானங்கள் அவசியமென்றும் சொன்னார்:—49. I. R. A. (N. S.) 479.

*   *   *

ஒரு ரயில்வே வேலைக்காரன் ரயில்பாதை ஸரியான நிலிமையில் இருக்கிறதாவென்று பார்த்துவிட்டு வருவதுவழக்கம். ஒருநாள் திடீரென்று வெள்ளம் வந்தது வேலைக்காரன் மிகுந்த தேகாவஸ்தைக்கு உள்ளானான். ரயில்வேக்காரர் அவன் நல்ல தேகஸ்திதிக்கு வருகிறவரையிலும் பணஉதவிசெய்து வரவேண்டுமென்று தீர்ப்பு. 49. L. R. A. (N. S.) 108.

*   *   *

ஒரு புருஷன் தன் குடும்ப ஜீவனத்துக்கு வேண்டிய ஸாமான்களைஸப்ளைசெய்யாமல் தன் மனைவியின் குடும்பத்தாராவது அல்லது மனைவியின் ஸ்னேகிதர்களாவது கருணை கூர்ந்து

உதவிசெய்தால் அந்த உதவிகளை யெல்லாம் சேர்த்து புருஷன் கொடுக்கக் கடமைப்பட்ட வனாகிறான். புருஷன் தான் குடும்பச்செலவுக்குக் கொடுக்காமலிருந்ததனால், குற்றத்துக்கும் உள்ளாகிறான். 49. L R. A. (N. S.), 588.

அமெரிக்கா ஐக்யமாகாணத்தில் இந்தியர்கள் குடியேறி யிருக்கிறார்கள். வெகு வருஷங்களாக அமெரிக்கர்களின் பழக்கவழக்கங்களை அனுசரித்து இருக்கிறவர்களின் குழந்தைகள் அமெரிக்கர்களின் பள்ளிக்கூடத்தில் வாசிக்கலாமாஎன்ற கேள்விவந்தது. பிரத்தியேகமான ஸ்கூல்கள் ஸ்தாபிக்கப் படவேண்டுமென்று ஜட்ஜியிடம் வாதாட அமெரிக்கர்கள் இந்தியர்களுக்கு தனியான ஸ்கூல்கள் ஸ்தாபிக்கக்கூடாதென்றும், அமெரிக்கா இந்தியர்களாகி விட்டபடியால் அமெரிக்கர்களின் ஸ்கூல்களில் வாஸிக்கபாத்யதை யுள்ளவர்களென்றும் தீர்மானம். 50. L. R. A. (N. S.) 147.

மதாரஸ் ஐக்கோர்ட்டு.

(ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர் முன்பாக.)

கோயமுத்தூர் ஜில்லா, பொள்ளாச்சியில் ஸ்டேஷனரி சப் மாஜிஸ்டிரேட் குற்றவாளி ஐவர்களில் ஒவ்வொருவருக்கும் பிரியாதி ரூ. 5 பரிகாரப்பணம் கொடுக்க வேண்டுமென்று செய்த உத்திரவிற்கு விரோதமாக பிரியாதி கோயமுத்தூர் ஜில்லா மாஜிஸ்டிரேட்டிடம் செய்து கொண்ட அப்பீலை மாற்ற விசாரணை செய்யப்படுவதற்காக பொள்ளாச்சி ஜாயின்ட் மாஜிஸ்டிரேட்டிற்கு அனுப்பப்பட்டது. ஜாயின்ட் மாஜிஸ்டிரேட் 21-1-1914-ல் விசாரணை தேதி குறிப்பிட்டு பிரியாதியின் வக்கீலுக்கும், குற்றவாளிகளுக்கும் நோட்டீஸ் அனுப்பினார். 21-1-1914-ல் ஜாயின்ட்மாஜிஸ்டிரேட் நோட்டீசு தவறுதலாகக் கொடுக்கப்பட்ட தென்று குற்றவாளிகளின் வக்கீல்களுக்கு சொல்லி குற்றவாளிகளை விசாரணை செய்யாமலே அப்பீலை விசாரணை செய்து பைசல் செய்து விட்டார். குற்றவாளிகள் செஷன் ஜட்ஜியிடம் அப்பீல் செய்து கொள்ளவே, அவர் இந்தக் கேசை ஐகோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பி, கேசில் ஜாயின்ட் மாஜிஸ்டிரேட் குற்றவாளிகளுக்கு நோட்டீஸ் கொடுக்கக்கூடுப்பட்டவரல்லவென்றும், ஆனால் நோட்டீஸ் கொடுக்கப்பட்டுப்போய் விட்டபடியால் அவர்களை விசாரணை செய்திருக்க வேண்டுமென்றும், ஆகையால் ஜாயின்ட் மாஜிஸடிரேட்டின் தீர்ப்பை ரத்து செய்து அப்பீலை பூரா விசாரணை செய்து பைசல் செய்யும்படியாக உத்திரவு பிறப்பிக்கலா மென்று அபிப்பிராயம் கூறி எழுதி அனுப்பினார். ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர் அவர்கள் இந்தக்கேசை இரண்டு ஜட்ஜிகள் கூடிய கோர்ட்டிற்கு அனுப்பும்படி உத்திரவு செய்திருக்கிறார்கள்.

(ஜட்ஜி மிஸ்டர் பேக்வேல் முன்பாக)

கோர்ட்டை நிந்தித்த கேஸ்.

ஒரு சிவில் நடவடிக்கையில் அய்யாவய்யர் என்பவர் கோர்டை அவமதித்ததாக குற்றம் சாட்டிப் பிராசிக்யூட் செய்ய அனுமதிகொடுக்க வேண்டுமென்று, இறந்துபோன மிஸ்டர் பி. வெங்கடாசலத்தின் பேரர்களில் ஒருவர் பேரில் டிக்கிரி பெற்றிருக்கும் திருமூர்த்தி செட்டி என்பவர் மனுசெய்துகொண்டார்.

கேசின் விபரம்.

மனுதார் சிவசங்கரம் பிள்ளையின்பேரில் ஒரு டிக்கிரி பெற்றிருந்தார். தீர்ப்புக்கடனாளி சிவசங்கரம்பிள்ளை தம்முடைய சொத்துக்களைத் தம்முடைய கடன்காரர்களுக்கெல்லாம் பங்கிட்டுக் கொடுக்கும்படியாக இரண்டு டிரஸ்டிகள் நியமித்து, அவர்கள் பேயரில் சொத்துக்களை எழுதி வைத்துவிட்டார். இந்த டிரஸ்டிகளில் ஒருவர் அய்யா அய்யர் என்பவர் மறுத்தார். தம்முடைய டிக்கிரியை நிறைவேற்ற மனுசெய்துகொண்டார். இந்த மனுவு

தீர்ப்புக்ககடனாளியின் வக்கீல் மிஸ்டர் விஸ்வ நாத சாஸ்திரியாரால் ஆக்ஷேபிக்கபபட்டது. மனு தள்ளுபடி செய்யப்பட்டது. கோர்ட்டார் தள்ளுபடி செய்யப்பட்ட உத்திரவில் "தீர்ப்புக் கடனாளியின் சொத்துக்கள் கடன்காரர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து பங்கிட்டுக் கொடுக்கப்படுமென்று ட்ரஸ்ட்டிகள் அவர்களுடைய வக்கீல் மூலியமாக ஒப்புக்கொள்ளுவதால் மனு தள்ளுபடி செய்யப்பட்டதென்று" சொல்லப்பட்டிருந்தது.

தீர்ப்புக் கடனாளியும் டிரஸ்ட்டிகளும் சேர்ந்து மற்ற கடன்காரர்களுக்கு நோட்டீஸ் கொடுக்காமல் ஒரு கடன் காரனுக்கு மட்டிலும் சொத்தைப் பராதீனம் செய்து விட்டார்கள்.

ஆகவே டிரஸ்டிகளில் ஒருவராகிய அய்யாவய்யர் கோர்ட்டில் ஒப்புக்கொண்டபடி கடன்காரர்களுக்கு நோட்டீஸ் கொடுக்காமல் சொத்தைப் பராதீனம் செய்தபடியால் அவர் கோர்ட்டை அவமதித்த குற்றத்திற்காக விசாரணை செய்யப்பட வேண்டுமென்று மனுதார் பிரஸ்தாப மனுவைத் தாக்கல் செய்திருக்கிறார். எதிர் மனுதாரராகிய அய்யாவய்யர் சொன்ன கக்ஷி என்னவென்றால், வக்கீல் மிஸ்டர் விஸ்வநாத சாஸ்திரியார் தீர்ப்புக் கடனாளியின் வக்கீல் என்றும், தான் யாதொரு வக்கீலும்வைக்கவில்லை என்றும், கடன்காரர்களுக்கு நோட்டீசு கொடுத்து சொத்தைப் பங்கிட்டுக்கொடுப்பதாக தாம் மிஸ்டர் விஸ்வநாத சாஸ்திரியார் மூலியமாக கோர்ட்டுக்கு சொல்லும்படி சொன்னதில்லை என்றும், கோர்ட்டார் ஜப்தி மனுவைத் தள்ளுபடிசெய்து பிறப்பித்த உத்திரவே தமக்குத் தெரியாதென்றுங் கக்ஷி சொன்னார்.

மிஸ்டர் விஸ்வநாத சாஸ்திரியார், அய்யாவய்யர் வக்கீல் வைக்கவில்லை என்றும், தாம் தீர்ப்புக் கடனாளிக்காக ஆஜரானதாகவும் 'கடன்காரர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து சொத்து பங்கிட்டுக் கொடுக்கப் படுமென்றும்' தாம் கோர்ட்டில் ஒப்புக்கொண்டதாக தமக்கு ஞாபகமில்லை என்று சொன்னார். இதன்பேரில் அய்யாவய்யரைப் பிராசிக்கியூட் செய்யச்செய்து கொள்ளப்பட்ட மனுவைக் கோர்ட்டார் தள்ளுபடி செய்துவிட்டார்கள். மிஸ்டர் விஸ்வநாதய்யர் தமக்கு ஞாபகமில்லை என்று சொல்லிவிட்டபடியால் கோர்ட்டார் ஜப்தி மனுவைத் தள்ளுபடி செய்து, செய்த உத்திரவில் கண்ட வாக்கியங்கள் சம்பந்தமாக இந்தக் கேசை பிரதம ஜட்ஜியினுடைய அபிப்பிராயத்ற்கும், பைசலுக்கும் அனுப்பினார்கள்.

எதிர்மனுதாருக்காக மிஸ்டர் வி. வி. சீனிவாசய்யங்காரும், ஆர். சத்திய மூர்த்தியும் ஆஜரானார்கள்.

ஹைகோர்ட்.

அசல்தரப்பு.

(காலஞ்சென்ற வெங்கடாசலம் எஸ்டேட்.)

ஜட்ஜி:-மிஸ்டர் ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரி.

வாதிகள்:-வெங்கட்ராமய்யபந்துலு வகையரு.

பிரதிவாதிகள்:—ஆர். சுப்பிரமணிய பிள்ளையும் இன்னும் 13 பேர்களும்.

கேசின் விபரம்:—வாதி பென்ஷன் பெற்றுக்கொண்டிருக்கும் தாசில்தார், பிரதிவாதிகள் காலஞ்சென்ற மிஸ்டர் பி. வெங்கடாஜலத்தின் குடும்பத்தைச்சேர்ந்தவர்கள். புரோநோட்டுகள் பேரிலும், அடமானப் பத்திரங்கள் பேரிலும் ரூ. 50-ஆயிரம் சொச்சம் பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டிருந்ததைவசூல்செய்ய வாதிகள் இந்த வியாஜ்ஜியத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

கேசின் நடவடிக்கை :—பிரதிவாதிகள் அனேக கக்ஷிகள் சொன்னார்கள்.

தீர்ப்பு :—அடமானப்பத்திரங்கள் செலாமணியாகக்கூடாதவையல்ல என்று ருஜுப்படுகிறதென்று தீர்மானித்தார்கள். முதல் பிரதி

வாதியால் வாங்கப்பட்ட கடன் சேர்ந்த குடும்பகாரியங்களுக்காக வாங்கப்பட்டது. முதல் பிரதிவாதி எஸ்டேட்டை ஒழுங்கீனமாக மானேஜ்மெண்டு செய்துகொண்டு வந்தாரென்றுவது, கடன்வாங்கப்பட்ட தொகையை தம்முடைய சொந்த காரியங்களுக்காக உபயோகப்படுத்திக்கொண்டு வந்தாரென்றுவது ருஜுப்படவில்லை. வாதிக்கு வட்டிக்கி வட்டிபோட்டிருப்பது கடுமையானதாகும். அது பொருந்தாததாகவு மிருக்கிறது. ஆகவே அசல் தொகை ரூ. 29,500-க்கும் 100-க்கு வருஷத்திற்கு 18 வீதம் கூடினவட்டிக்கும் டிக்கிரி கொடுக்கிறோம் என்று தீர்ப்புசொன்னார்கள்.

(ஜட்ஜி மிஸ்டர் பேக்வெல் முன்பாக.)

வாதியும் வக்கீல், பிரதிவாதியும் வக்கீல்.

ஐக்கோர்ட்டு வக்கீலாகவும் இதற்கு முந்தி மதிராசு லா டைம்ஸ் பத்திரிகை பதிப்பித்துப் பிரசுரித்துக்கொண்டு வந்தவருமான மிஸ்டர் கே. ராமசந்திரய்யர்; இன்னொரு ஐக்கோர்ட்டு வக்கீல் மிஸ்டர் என். ஆர். கே. தாதாச்சாரியாரிடமிருந்து ரூபா 2,530 வரவேண்டு மென்று அவர்பேரில் கொண்டுவந்த வியாஜ்ஜியம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வாதியின் பிரியாதில் வாதி லா டைம்ஸ் என்னும் பத்திரிகையைத் தயார் செய்வதில் 1910-ம் வருட முழுவதிலும் பிரதிவாதி உதவிசெய்ய வேண்டுமென்று அமர்த்தப்பட்டார் என்றும், அந்த வருடமுழுவதிலும் வேலை பார்ப்பதாக ஒப்புக்கொண்டு எக்ரிமெண்டு எழுதிக்கொடுத்திருந்தபோதிலும், 5-மாதம்தான் வேலை பார்த்தார் என்றும் பிரியாதுடன் சேர்க்கப்பட்டிருக்கும் ஷெடியூலில் காணப்பட்ட புஸ்தகங்களும், பத்திரிகைகளும் வாதிக்கி வந்திருந்தும் அவைகளைப் பிரதிவாதி எடுத்துக்கொண்டு போய்ப் பலதடவைகேட்டும் கொடுக்காமலிருக்கிறார் என்றும், ஆதலால் அந்தச்சொத்துக்களுடைய கிரயம் ரூபா 2,530-ம் அச்சொத்துக்களை அநியாயமாய் வைத்துக்கொண்டிருப்பதால் வாதிக்கு நேரிட்டிருக்கும் நஷ்டம் ரூபா 200-ம் பிரதிவாதியிட மிருந்து வரவேண்டு மென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பிரதிவாதியின் கக்ஷி என்னவென்றால்பிரதிவாதி 1910-ம் வருடமுதல் தனியே எடிட்டராக விருந்து லா டைம்சை நடத்திக்கொண்டு வரவேண்டுமென்றும், அந்த வருடக்கடைசியில் லா டைம்சையே பிரதிவாதிக்கு விற்றுப்போட வேண்டுமென்றும் வாதிக்கு எடிட்டர் முறையில் வந்த புஸ்தகங்களையும், பத்திரிகைகளையும் பிரதிவாதிக்குக் கொடுக்கவேண்டுமென்றும், அந்த புத்தகங்களுக்கெல்லாம் நமோதா விலைபோட்டு பிரதிவாதிக்கே கொடுத்துப் போடுகிறதென்றும் வாதி பிரதிவாதிகள் ஏற்பாடு செய்துகொண்டார்கள். இப்படியிருக்கும்போது வாதி பிரதிவாதியின் எடிட்டர் வேலையில் அக்கிரமமாய்ப் பிரவேசித்து உடன்படிக்கையை மீறிநடந்தார். ஆதலால் அப்போதே பிரதிவாதி தமக்கு நஷ்டம் கொடுக்க வேண்டுமென்று வாதிக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். எடிட்டர் செலவுக்காக மாதம் ஒன்றுக்கு ரூபா 100 பிரதிவாதிக்குக் கொடுத்து வருவதாகப் பிரதிவாதி ஒப்புக்கொண்டிருக்க ஜனவரி மாதத்தில் மட்டிலும் ரூபா 35-கொடுத்திருக்கிறார், ஆகவே வாதி உடன்படிக்கையை மீறி நடந்ததாய் பிரதிவாதிக்கு நேரிட்டிருக்கும் ரூபா 3,000-மும் எடிட்டர் முறையில் கிடைக்கவேண்டிய புஸ்தகங்கள் பத்திரிகைகளின் மதிப்பு ரூபா 1,200-ம் வாதியிடமிருந்து வரவேண்டுமென்பது பிரதிவாதியின் கக்ஷி.

மெஸர்ஸ் வி. பி. ராமசாமி அய்யர், வி. வி. சீனிவாசய்யங்கார், எ. நரசிம்மாச்சாரி பிரதிவாதிக்காக ஆஜரானார்கள். மிஸ்டர் ஜி. கிருஷ்ணசாமி அய்யர் வாதிக்காக ஆஜரானார். வியாஜ்ஜியம் விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

அசல் தரப்பு.

(ஜட்ஜி மிஸ்டர் குமாரசாமி சாஸ்திரியார் முன்பாக)

பெரியதம்பி முதலியார் இன்ஷியூரன்ஸ் கேஸ்.

இறந்துபோன பெரியதம்பி முதலியார் பீனிகஸ்லேயிப் இன்க்ஷியூரன்ஸ் கம்பெனியில் தமது ஆயுளை ரெஜிஸ்டர் செய்து வைத்திருந்தார். அந்த கம்பெனியிலிருக்கும் பணத்திற்கு மூன்றுபேர்கள் பாத்தியத்தை பாராட்டினுர்கள். கம்பெனி பணத்தைக் கொடுக்க மறுதளிக்கின்றது. அது விஷயமாக வியாஜ்ஜியம் நடந்துகொண்டிருக்கிறது. கேஸ் முடிந்து தீர்ப்பு சொல்லுவதற்கு முந்தி ஷை லேப் இன்ஷியூரன்ஸ் தரப்பிற்காக பாரிஸ்டர் மிஸ்டர் ஆஸ்பர்ன் ஆஜராகி நம்முடைய கக்ஷிக்காரராகிய பிரதிவாதி தாக்கல்செய்த எழுத்து வாக்குமூலத்தில் "பெரியதம்பி முதலியார் பீனிக்லேயிப் இன்ஷியூரன்ஸ் கம்பெனியில் அவருடைய ஆயுளை இன்ஷியூரன்ஸ் செய்துவைப்பதற்குமுந்தி கானடா லேயிப் இன்ஷியூரன்ஸ் கம்பெனியில் இன்ஷியூரன்ஸ் செய்துவைக்க எத்தனித்ததையும் இந்த கம்பெனியார் அவருடைய ஆயுளை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும் பீனிக்ஸ் இன்ஷியூரன்ஸ் கம்பெனிக்கு அறிவிக்கவில்லை. இந்த சமாசாரம் ஏற்கனவே எழுத பட்டுப்போய் விட்டபடியால் இப்போது அந்த எழுத்து வாக்குமூலத்தை மேற்கண்டபடி சீர்திருத்தும்படி கோர்ட்டார் அனுமதி கொடுக்கவேண்டுமென்று மனு செய்து கொண்டார். வாதிக்காக வக்கீல் மிஸ்டர் மகாதேவ அய்யருடன் வக்கீல் மிஸ்டர் சி. பி. ராமசாமி அய்யர் ஆஜராகி மனுவை ஆக்ஷேபித்துக் கேசின் விசாரணை முடிந்து போனபின்பு எழுத்து வாக்குமூலம்சீர்திருத்த தப்படக் கூடாதென்று சொல்லி அதற்குப் பிரமாணமாக 12-லா டைம்ஸிலும் 14 இந்தியன் அப்பீலிலும் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும கேசை எடுத்துக் காண்பித்தார். கோர்ட்டார் பிரதிவாதி கேட்டுக்கொண்டபடி எழுத்து வாக்குமூலத்தை சீர்திருத்த அனுமதி கொடுத்தார்கள். ஆனல் பிரதிவாதி கம்பெனியார் எழுத்து வாக்குமூலத்தை இந்த சமயத்தில் சீர்திருத்த எத்தனித்தபடியால் இந்த வியாஜ்ஜியத்தின் செலவு தொகையை பிரதிவாதிகள் வாதிகளுக்குச் செலுத்தவேண்டுமென்றும், கேசு எப்படியிருந்தபோதிலும் பிரதிவாதிகளுக்கு செலவு தொகை கொடுக்க உத்திரவு செய்யப்பட மாட்டாதென்றும் உத்திரவு செய்தார்கள்.

ஆயக்குடி ஜெமீன் கேஸ்.

ஒரு பராதீனத்தை ரத்து செய்து வைக்க வேண்டுமென்று மதுரை ஜில்லா ஜட்ஜி கோர்ட்டில் செய்துகொண்ட வியாஜ்ஜியத்தில் செய்யப்பட்ட தீர்மானத்திற்கு விரோதமாக மதிராசு ஐக்கோர்ட்டில் செய்துகொள்ளப்பட்ட அப்பீலுக்கு ஜட்ஜி மிஸ்டர் சங்கர நாயரும் ஜட்ஜ் மிஸ்டர் ஸ்பெஸ்ஸரும் கூடிய கோர்ட்டார் முன்தினம் தீர்ப்பு சொன்னுர்கள். ஆயக்குடி ஜெமீன் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மெம்பராகிய ரங்கசாமி என்பவர் ஷை ஜெமீனிக்கு பாத்தியத்தை பாராட்டிச் செய்த வியாஜ்ஜியத்தில் செலவான பணத்திற்காக ஷை ஜெமீனைச் சேர்ந்த ஒரு சொத்தைப் பராதீனம் செய்தார். இந்தப் பராதீனம் செலாவணியாக மாட்டாதென்றும் அதை ரத்து செய்யும் பொருட்டும், ஷை ரங்கசாமியின் தமயன் பிள்ளைகள் மதுரைஜில்லா ஜட்ஜி கோர்ட்டில் வியாஜ்ஜியம் செய்தார்கள். ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் பராதீனத்தை ரத்துசெய்து வாதி பக்கம் தீர்ப்பு சொனனுர்கள். ரங்கசாமி ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டதில், பிரஸ்தாப வியாஜ்ஜியச் செலவுகள் குடும்பத்தின நன்மைக்காகச் செய்யப்பட்டவைக.ளென எண்ணப்பட முடியாதென்று நியாயம் சொல்லி கீழ்க்கோர்ட்டார் தீர்மானத்தை உறுதிப்படுத்தி தீர்ப்பு சொன்னுர்கள்.

THE CRIMINAL CASES.

கிரிமினல் சட்டக் குறிப்புகள்.

குற்றவாளியின் களவுகள்.

சேணிய ஜாதியைச் சேர்ந்த 12-வயதுள்ள கன்னியப்ப னென்பவனும் 16-வயதுள்ள சின்னசாமி யென்பவனும் சேர்ந்து நாளது மாதம் 7-தேதியில் சில வீடுகளில் நுழைந்து கடியாரங்கள் சங்கிலிகள், மூக்குக் கண்ணாடிகள், வெள்ளிப் பொத்தான்கள், ஆகிய சாமான்களைத் திருடியதாக சார்ஜ் செய்யப்பட்டார்கள். சாமான்களை விற்கும்போது குற்றவாளிகள் பிடிபட்டார்கள். இவர்கள் ஓடி ஒளித்து விளையாடுபவர்களைப் போல் நடித்து சாதுரியமாய்த் திருடினார்களாம். முதல் குற்றவாளி 6-மாதத்துக்கு நன்னடத்தைக்கு ஜாமீன் வாங்கிக்கொண்டு விடப்பட்டான். 2-வது குற்றவாளி 12-அடி தண்டனை விதிக்கப்பட்டான்.

ஒரு மோசக் கம்பெனி.
எதிரி தண்டிக்கப்பட்டான்.

சென்னை, ஜியார்ஜடவுன் பிரிமியர் இண்டஸ்டிரியல் கம்பெனியின் மானேஜரான மிஸ்டர் ஸ்ரீனிவாச ராகவன் என்பவன் ஜனங்களை ரூபா 4,000-வரை மோசம் செய்துவிட்டதாக போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் மிஸ்டர் சாம்பசிவ பிள்ளையால் சார்ஜ் செய்யப்பட்டிருந்த கேசில் மாஜிஸ்ட்ரேட் இன்று தீர்மானம் சொன்னார்.

குற்றவாளி செய்த குற்றம் பிரமாதமானதென்றும் குற்றவாளி இந்த பிராசிகியூஷனால் நிரம்பவும் மனத்துன்பத்தையும் சரீர கஷ்டத்தையும் அடைந்திருப்பதை உத்தேசித்து குற்றவாளிக்கு 9-மாதம் கடுங்காவல் சிக்ஷையும் ரூபா 300 அபராதமும், அபராதம் கொடுக்காவிடில் 3-மாதம் கடுங்காவல் சிக்ஷையும் விதித்திருப்பதாக மாஜிஸ்டிரேட் சொன்னார்.

பிராசிகியூஷனை நடத்த அசிஸ்டண்டு பிராசிகியூடிங் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் நாராயணசாமி அய்யரும் குற்றவாளிக்காக ஹைகோர்ட்டு வக்கீல் மிஸ்டர் நரசிம்மய்யரும் ஆஜரானார்கள்.

ஒரு அநீதியான தண்டனை தள்ளப்பட்டது.

பொள்ளாச்சி ஜாயிண்டு மாஜிஸ்ட்ரேட் பொன்னுசாமி என்ற பழைய குற்ற வாளிக்கு திருடிய குற்றத்திற்காக 3-மாத கடுங்காவலும் 20 அடியும் விதித்தார். கடுங்காவலோடு 20 அடியும் விதிப்பது 'விப்பிங்' ஆக்ட் IV of 1909 படி சரியானதாகாது. ஜில்லா மாஜிஸ்ட்ரேட் குற்றவாளிக்கு அடி தண்டனை விதிப்பதை நிறுத்தி வைக்கும்படி உத்தரவிட்டு ஹைகோர்ட்டுக்கு தாக்கல் செய்தார். ஹைகோர்ட்டில் இரண்டு தண்டனைகளையும் விதிக்கக்கூடாதென்று சொல்லி, 24 அடி தண்டனையை தள்ளிவிடும்படி உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

ஜாமீன்போரில் விடப்பட்டான்.

கருப்பண்ண சேர்வை என்பவன் தேவகோட்டையில் அபாயத்தை விளைவிக்கக்கூடியவன் என்றும், அவனிடமிருந்து நல்ல நடத்தைக்கு ஜாமீன் வாங்காமல் அவன் பயிரங்கமாக நடமாடும் படியாக விடப்படக் கூடாதென்றும் கி. பு. கோ. 110-வது பிரிவின்படி போலீஸார் அவன்பேரில் தேவகோட்டை டிவிஷன் மாஜிஸ்டிரேட் முன்னில் குற்றம் சாட்டினார்கள். குற்றவாளி கடந்த மே மாதம் கைதிசெய்யப்பட்டு, ரூபாய் இரண்டாயிரத்திற்கு அவனுடைய சொந்த ஜாமீன் பத்திரத்தின்பேரிலும் ஆயிர, ஆயிரரூபாய்க்கு வேறே இரண்டு ஜாமீன்கள் பேரிலும் அவன் விடுவிக்கப்பட்டு அடுத்த ஜூன்மீ 9-ந் தேதியிலும், அதன் பிறகு ஜூன் 29உயிலும் கோர்ட்டில் ஆஜராகும்படி உத்திரவு செய்யப்பட்டான்.

குற்றவாளி விசாரணை வாயிதா தேதிக்கி 5-நாட்கள் கிரமித்து வக்கீலுடன் கோர்ட்டில் ஆஜராகி விசாரணைத் தேதியை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டான். ஜுலை மாதத்தில் மறுபடியும் வாயிதாவைத் தள்ளி வைக்கும்படி கேட்டுக்கொண்டான். சப் டிவிஷன் மாஜிஸ்டிரேட் குற்றவாளியின் ஜாமீன் பத்திரத்தில் ரூபா 500 கவர்ன்மெண்டு பரிமுதல் செய்யப்பட வேண்டுமென்று ஜாமீன் தார்களுடைய பத்திரங்களில் ரூ 100-100 பிடித்து கவர்ன்மெண்டுக்குப் பரி முதல் செய்யப்படவேண்டு மென்றும். குற்றவாளியை ரிமாண்டில் பிடித்து வைக்கும்படியும் உத்திரவு செய்தார் குற்றவாளி ஐக்கோர்ட்டில் ரிவிஷன் மனு தாக்கல் செய்தான். குற்றவாளி ஜாமீன்பேரில் விட்டிருக்கும்போது அவனை ரிமாண்டு ஜெயிலுக்கு அனுப்ப கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை என்று குற்றவாளி தரப்பில் கக்ஷி சொல்லப்பட்டது.

குற்றவாளியை ரூபாய் ஆயிரத்திற்கு அவனுடைய சோந்த ஜாமீன்பேரிலும் ஆயிர ஆயிர ரூபாய்க்கு வேறே இரண்டு ஜாமீன்பேரிலும் அவன்கேஸ் முடிவடையும் பரியந்தம் விடும்படியும் ஐக்கோர்ட்டார் உத்திரவு செய்தார்கள்.

(ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர் முன்பாக)

உயிலைக் கிழித்த குற்றம்

"சின்னம்மா" என்னும் ஒரு கிறிஸ்தவ ஸ்த்ரீயின் பேரில் இ. பி. கோ. 204-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற "உயிலை மறைத்துவைத்தது அல்லது கிழித்த குற்றம்" நரசராவ்பேட்டை சப் மாஜிஸ்டிரேட்டின் முன்னில் சாட்டப்பட்டது. அந்த உயில் குற்றவாளியினுடைய பிதாவால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. உயிலைக் கிழித்ததில் குற்றவாளியின் நோக்கம், குற்றவாளியின் பிதா இறந்துபோனவுடன் குற்றவாளி சில நிலங்களைத் பராதீனம் செய்திருக்கிறதாகவும், இந்த பராதீனங்கள் செலாவணியாகக் கூடாதென்பதே என்று சொல்லப்படுகிறது. குற்றவாளி தான் யாதொரு குற்றத்தையும் செய்யவில்லை என்றுகக்ஷி சொல்லி தன்னுடைய தகப்பன் திடீரென்று இறந்துபோகும்போது தன்னுடைய தாயாராகிய அவருடைய மனைவியை ஆயுசுள்ள பரியந்தம் காப்பாற்றி வரும்படியாகச்சொல்லிவிட்டு இறந்து போனாரென்றும், தன்னுடைய தாயார் இறந்துபோன பின்பு தான் எஸ்டேட்டிற்கு எஜமானி ஆனதாகவும், தகப்பனார் யாதொரு உயிலையும் எழுதி வைக்கவில்லை என்றும் டிபனஸ் சொன்னாள். மாஜிஸ்டிரேட் குற்றவாளி சொன்ன டிபன்சை நம்பாமல் குற்ற ஸ்தாபனைசெய்து ஒருமாத காலம் சாதாரண ஜெயில் தண்டனைவிதித்தார்.

இந்த உத்திரவிற்கு விரோதமாக குற்றவாளி ஐக்கோர்ட்டில் வக்கீல் மிஸ்டர் ஐ. வி. ராமானுஜராவ் மூலியமாக கிரிமினல் டிவிஷன் மனு தாக்கல் செய்தனள். குற்றவாளி தரப்பு லாயர் தம்முடைய கக்ஷியை எடுத்துச் சொல்லிக்கொண்டு வரும்போது உயில் ஒன்றிருந்ததாக சட்டப்படி ருஜுப் படுத்தப்படவில்லை என்றும், இந்தியன் வார்சு சட்டத்தின் 50-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களை மாஜிஸ்டிரேட் அலக்ஷியம் செய்திருக்கிறார் என்றும், குற்றவாளியின் தாயார் இரண்டு மாதங்களுக்குமுந்தித்தான் இறந்துபோயிருக்கிறாள் என்றும், குற்றவாளி முழுச்சொத்திற்கும் பாத்தியப்பட்டவள் என்றும், குற்றவாளி உயிலைக் கிழித்திருந்தாலும் கூட அதனால் பிரயாதிக்கு யாதொரு தீங்கும் அல்லது நஷ்டம் உண்டாகவில்லை என்று சொன்னார். பிராசிக்கியூஷன் தரப்பிற்கு பப்ளிக் பிராசிக்கியூட்டருக்குப் பதிலாக ஆஜராயிருந்த பாரிஸ்டர் மிஸ்டர் ர. கிரான்ட் வாதித்ததையும் கோர்ட்டார் கேட்ட பின்பு குற்ற ஸ்தாபனையையும் ரத்து செய்துவிட்டார்கள்.

வீடு புகுந்து திருடின கேஸ்.

கேசின் விபரம்:—கார்போரேஷன் பிளேக் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் டி.எஸ்.ராமசாமி அய்யர் தம்முடைய மோதிரத்தையும், கை கெடியாரத்தையும், இன்னும் சில சாமான்களேயும், ஆகமொத்தம் ரூபா 150 பெறுமானமுள்ள சமான்களே தம்முடைய சட்டையின் ஜேப்பியில்வைத்து தம்முடைய அறையிலிருந்த கோட்டு ஸ்டாண்டில் தொங்கவிட்டு நித்திரை செய்தார். மறுநாள் காலேயில் சட்டையைக் காணேம். போலிசாருக்கு ரிப்போர்ட்டு செய்தார். சென்ற மாதம் 23-ந் தேதி போலீஸார் திருடனைக் கண்டுபிடித்து களவு போன சொத்துக்களில் சிலவற்றை வாங்கிப் போட்டார்கள். களவாட்டப்பட்ட சொத்துகளில் சில பலபேர்களிடம் அடமானம் வைக்கப்பட்டிருந்தன. அடமானம் வைத்துக்கொண்டவர்களே சாக்ஷிகளாக வைத்துக்கொண்டு போலீசார் குற்றவாளியின்பேரில் "வீடுபுகுந்து" திருடின குற்றம் சாட்டினுர்கள் மாஜிஸ்டிரேட் இந்தக் கேசை விசாரணைசெய்து குற்றவாளிக்கு இரண்டுவருஷம் கடினகாவல் தண்டனை விதித்து அவன் ஜயிலே விட்டுத் திரும்பிவந்தவுடன் மூன்று வருடம் வரையில் அவனுடைய இருப்பிடங்களேப் போலீஸாருக்குத் தெரிவித்துக்கொண்டு வரவேண்டு மென்று உத்தரவு செய்தார்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் சங்கரநாயர்,
மிஸ்டர் நேப்பியர்,
மிஸ்டர் ஸ்பென்சர்.

ராயபுரம் மாதாகோவில் கேஸ்.

இந்த ராயபுரம் மாதாகோவில் கேசின் விபரத்தைப்பற்றி புல்பென்ச் கோர்ட்டார் அடியிற்கண்டபடி தீர்ப்பு சொன்னுர்கள்:—

இந்தக் கோர்ட்டின் இரண்டு ஜட்ஜிகளே நிந்தித்து மனு எழுதப்பட்டிருக்கிறது. அப்படி எழுதப்பட்டிருப்பது கோர்ட்டை அவமதித்ததாகின்றது. இந்தக் கேசிலுள்ள மற்ற விஷயங்களே எல்லாம் கவனித்து நாம் அந்த நிந்தனைகளே அருவெறுக்கிறேம் என்னும் அபிப்பிராயம் வெளிப் படுத்துவதைத் தவிர மனுதாருடைவும், அச்சாபீசுக்கராருடையவும் நடத்தைக்காக வேறே நடவடிக்கை நடத்துவது அனுவசியமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறேம்."

மதராஸ் ஐக்கோர்ட்டு.

இந்தியா—சீனு பாங்க் கேஸ்.

கிரிமினல் அப்பீல்.

(ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர் முன்பாக.)

பாரிஸ்டர் ஆனரபில் மிஸ்டர் ரிச்மெண்டு, தென் ஆற்காடு ஜில்லா செஷன் ஜட்ஜியின் தீர்மானதிற்கு விரோதமாகச்செய்து கொள்ளப்பட்ட அப்பீலில், அப்பீல் வாதியின் கக்ஷியை எடுத்துப் பேசினர். இந்தக் கேசின் விபரம்—மஞ்சக்குப்பம் கூடலூர் சோமசுந்திரம் பிள்ளை என்பவர், இண்டோ-சைனுபாங்க்கு அடமானம் வைக்கப்பட்டிருந்த 450 மணிலாக் கொட்டை மூட்டைகள் போட்டு அடைத்து வைக்கப்பட்டிருந்த அறையின் பூட்டை உடைத்து அவைகளே விற்பனைசெய்வதற்காக அயோக்கியமான எண்ணத்துடன் அவைகளே அந்த அறையைவிட்டு எடுத்தார் என்று இ. பி. கோ. 454, 380-வது பிரிவுகளின் குற்றத்திற்காக கூடலூர் சப்டிவிஷன் மாஜிஸ்ரேட் முன்பாக குற்றஞ் சாட்டப்பட்டார். மாஜிஸ்டிரேட் கேசை விசாரணைசெய்து குற்றவாளிக்கு 6 மாத கடுங்காவல் தண்டனையும் ஆயிர ரூபாய் அபராதமும் விதித்தார்.

குற்றவாளி தென் ஆற்காடு செஷன் ஜட்ஜிக்கு அப்பீல் செய்து கொண்டார் குற்றவாளி பிசகான சமாசாரத்தைக் கேள்விப்பட்டு அதை நம்பி இந்தக் குற்றத்தைச்செய்திருக்கிறதாகத் தெரிகிறதென்று பிராசிகியூஷன் தரப்பு முதல் சாக்ஷியாகிய டைரக்டருடைய சா

க்ஷியத்தால் தெரிய வருகிறதென்றும், பிராசிக்கியூஷன் தரப்புமுதல் சாக்ஷியத்தால் தெரிய வருகிற தென்றும் செஷன் ஜட்ஜி அபிப்பிராயப்பட்டார். மூட்டைகள் குற்றவாளிகளுடைய வசத்திலிருந்து வந்தனவென்றும், ஆதலால் குற்றவாளியின்பேரில் மாஜிஸ்டிரேட் குற்ற ஸ்தாபனைசெய்தது பிசகு என்றும் அபிப்பிராயப்பட்டார்.

பாங்கியில் மூட்டைகளை அடமானம் வைத்து ரூ. 4,500 கடன்வாங்கி யிருப்பதைக்குற்றவாளி தம்முடைய எழுத்து வாக்கு மூலத்தில் ஒப்புக்கொண்டிருக்கிறார். இந்த மூட்டைகளில் சிலவற்றைக் குற்றவாளி அடமானத்திலிருந்து மீட்டுக்கொண்டதையும், இருதரப்புக்காரர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆகையால் குற்றவாளிக்கு சட்டவிரோதமாக பாங்கியாருடைய அடமானத்திற்குட்பட்டிருந்த மூட்டைகளை எடுத்து விற்பனை செய்ததில் பாங்கிக்கு சேரவேண்டிய பணத்தை சமீபத்தில் பாங்கிக்குச் செலுத்திப் போடவேணு மென்கிற எண்ணம் அவருக்கு இல்லை என்று அபிப்பிராயப்பட்டார் ஆகையால் இ. பி. கோ. 424-வது பிரிவின்படி குற்ற ஸ்தாபனை செய்து தண்டனையை உறுதிப்படுத்தினார்.

அதன்பேரில் குற்றவாளி ஐக்கோர்ட்டில் கிரிமினல் டிவிஷன் மனு தாக்கல் செய்தார்.

பாரிஸ்டர் ரிச்மெண்டு பாங்கியார் மூட்டைகளைக் குற்றவாளியிடமே விட்டு வைத்திருந்தார்கள் என்றும், குற்றவாளியின் நடவடிக்கைகள் யோக்கியமற்றதாயிருக்கவில்லை என்றும் குற்றவாளி தெரியாமல் இந்தக்குற்றத்தைச் செய்திருப்பதாகவாவது எண்ணப்பட வேண்டுமென்றும் அயோக்கியமான எண்ணம் குற்றவாளியிடம் இல்லை என்றும் சொன்னார்.

ஐக்கோர்ட்டார் குற்ற ஸ்தாபனையை தாங்கிப்பேசி ஜெயில் தண்டனையை 6 மாதத்திலிருந்து இரண்டு மாதமாகக் குறைத்து அபராதத்தை உறுதி செய்துவிட்டார்கள்.

ஜட்ஜி :—மிஸ்டர் சதாசிவய்யர் முன்பாக.

நாகப்பட்டணம் அபின் கேஸ்

முகமத் காசிம் என்பவரும் மற்றவர்களும் அதன் ஆக்ட்டின்படி குற்றமாகும் காரியத்தைச் செய்ததற்காக நாகப்பட்டணம் இரண்டாவது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டால் 3-மாத முதல் 6-வரையில் தண்டனை விதிக்கப்பட்டார்கள். இவர்கள் ஐக்கோர்ட்டில் கிரிமினல் ரிவிஷன் மனு தாக்கல் செய்தார்கள். மனுதாருக்காக மிஸ்டர் ஏ. ராமசாமி முதலியாருடன் பாரிஸ்டர் ஆனரபில் மிஸ்டர் ரிச்மெண்டு ஆஜராகி அபின் ஆக்டின்படி செய்யப்படும் குற்றங்கள் இதற்கென்று அதிகாரம் கொடுக்கப்பட்ட இரண்டாவது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டுகளால் விசாரணை செய்யப்பட வேண்டுமென்றும், "இரண்டாவது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டுகள் அபின் ஆக்ட்டின் குற்றங்களை விசாரணை செய்ய அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்" என்றும் கவர்ன்மெண்டார் 9-10-1906-ல் ஒரு விளம்பரம் பிரசுரித்திருந்தபோதிலும் அந்த விளம்பரத்தைக் கொண்டு அந்தக் காலத்திலிருந்த இரண்டாவது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டுகள் மட்டிலும் அதிகாரம் பெற்றவர்களாகிறார்களே ஒழிய அதற்குப்பிந்தி இரண்டாவது கிளாஸ் அதிகாரம் பெற்றவர்களுக்கு அந்த விளம்பரம் பொருந்தாதென்றும். அபின் சட்டக் குற்றங்கள் அநுபோகமடைந்த மாஜிஸ்டிரேட்டுகளால் விசாரணை செய்யப்பட வேண்டுமென்பது சட்டத்தின் தார்ப்பரியமென்று எடுத்துச் சொன்னதின்பேரில் அப்பீலை தாக்கல் செய்துகொண்டு குற்றவாளிகளை ஜாமீன்பேரில் விடும்படி உத்திரவு செய்தார்கள்.